தென்மொழி

2378

எந்தத் தலைமுறை
எழுந்துநிற் பானோ?

இந்தத் தமிழன் ஏமாளித் தமிழன்;
இன்னுஞ் சொன்னால் கோமாளித் தமிழன்!
சொந்தத் தமிழையும் படியான்; தன்னின்
சொந்த இனத்தையும் மதியான்; இவனொரு
மந்தத் தன்மையன்; மழுங்கல் மதியன்;
மானமும் நாணமும் அழுகிக் கிடப்பவன்;
எந்தத் தலைமுறை எழுந்துநிற் பானோ?
எவன்வந்து சொல்லி இவனைமீட் பானோ?

இந்தத் தமிழன் இளித்தவாய்த் தமிழன்;
இன்னுஞ் சொன்னால் புளித்தவாய்த் தமிழன்!
சந்துக்குச் சந்து தன்கொள்கை மாறுவான்!
சடுதியில் ஒப்பியே பின்னதை மீறுவான்!
குந்தித் தின்னும் வாய்ப்புக் கிடைத்தால்
குடும்பம் முழுதுமே அடிமையாய் விற்பான்!
எந்தத் தலைமுறை எழுந்துநிற் பானோ?
எவன்வந்து சொல்லி இவனைமீட் பானோ?

மொழி-இனம்-நாடு

சுவடி : 15.
ஓலை: 8.

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை.
1. உருபா.

நமக்கு வந்த மடல்கள்.

(இம்மடற் பகுதிக்கு எழுதுபவர்கள், தங்கள் கருத்துகளை நீண்ட கட்டுரையாக எழுதாமல் மிகமிகச் சுருக்கமாக எழுதி விடுக்க வேண்டுகின்றோம்.)

0:632: அன்பார்ந்த ஐயா, வணக்கம். 12-11-78 ஞாயிறன்று கோபிக்குத் தாங்களும் அம்மா அவர்களும் வந்து எங்களை மகிழ்வித்தீர்கள். அன்று இராப்பொழுது இரண்டு மணிவரை தாங்கள் எங்களோடு உரையாடியதை நாங்கள் என்றும் மறக்க முடியாது. நாம் மூச்சுயிர்க்கும் காற்றானது எவ்வாறு இந்நிலவுலகம் முழுமையும் அளாவி நின்று காற்று மண்டிலமாய் விளங்குகிறதோ அதுபோல நமது மனமும், அறிவும் அண்டம் அளாவிய மண்டிலமாய் உள்ளது என்றும்; வாழ்ந்த, வாழ்கின்ற மாந்தர் அனைவரின் மனமும், அறிவும் என்றும் அழியா இயல்புடன் எக்கருவிக்கும் எட்டா நுண்ணலையாய் இயங்கிக் கொண்டிருக்கிறது என்றும்; நம் உடலகத்துள்ள மனமும் அறிவும் அண்டமளாவிய அம் மனமண்டிலத்தையும் அறிவு மண்டிலத்தையும் உணரும் ஓர் அரிய சிறு கருவியே என்றும் தாங்கள் எளிய முறையில் விளக்கியது எங்களுக்குப் பேருவகை தந்ததோடு, எங்கள் மனத்தையும் அறிவையும் சிலிர்க்க வைத்தது! இவற்றோடு தாங்கள் இயம்பிய இன்ன பிற செய்திகளையும் மீண்டும் மீண்டும் எண்ணிப் பார்க்கின்ற போது தங்களின் நுண்மாண் நுழைபுலம் எங்களை வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறக்க வைக்கின்றது.

இதுபோன்ற எண்ணிலா அறிவு விருந்தை, அழியா மெய்ப்பொருள் விருந்தை அமிழ்தமாய்த் தரவிருக்கும் தங்களின் **'திருக்குறள் மெய்ப்பொருள் உரை'**யைத் தாங்கள் விரைந்து எழுத வேண்டுமாய்ப் பணிவுடன் வேண்டுகின்றேன். தாங்கள் இந்நூலை ஆக்க நாள்தோறும் குறைந்தது ஒருமணி நேரமாவது ஒதுக்கி அதனை விரைவில் நிறைவு செய்து, அறிவுலகம் அரும்பயன் பெறத் தரவேண்டுமாய் ஆரா அறிவு வேட்கையுடன் பணிந்து கேட்டுக் கொள்கின்றேன். —தங்கள் அன்பன் **பொான். முகிலன்**. கூவலூர்.

0:633: மாண்புயர் ஐயா அவர்கட்கு வணக்கங்கள். தமிழ் உணர்வு என்ற பிணைப்பால் தங்களுடன் இணைப்புக் கொண்டுள்ள ஆயிரக்கணக்கானவருள் ஒருவன் யான். ஒரு மாந்தனின் முழு வாழ்வுக்குரிய வழி முறைகளைக் காட்டும் தலைவராகக் கருதித் தங்கள் வழிச்செல விழைவுடையேன். திருச்சி "தென்மொழி" மாநாடு தொடங்கித் தமிழக விடுதலையைக் காட்டும் தலைவர் தாங்களே அன்றிப் பிறர் அல்லர் எனக்கருதி விடுதலை வேட்கை உள்ளில் கனன்றிருக்கக் காப்போருள் யான் கடைசி ஆள். ஆனால் இடைக் காலத்தில் விடுதலைச் செலவு பற்றித் திட்டமான செயல் முறைகள் தங்களிடம் இருந்து வராமையாலும், இக்கால் "அரசியலாளர்" மேடைகளில் தாங்கள் கலந்து கொள்ளும் முறைமையாலும் சற்றே சோர்வு கொண்டுளோரில் யான் முதலாமவன். ஆயினும் சில ஐயங்கள். தமிழகம் சான்றோரால் நிரம்பி இருந்த காலம் ஒன்று. ஆனால்சான்றோர்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!

சுவடி: 15 ஓலை: 8.
[நிறுவனம் தி. பி. 1990 (1959)]
கும்பம் தி. பி. உ0கய-
பெப்ருவரி-மார்ச்சு-1979.

தென்மொழி
இலக்கிய இதழ்

பொறுப்பாசிரியர்: **பெருஞ்சித்திரனார்.**
ஆசிரியர்: **மா. பூங்குன்றன்.** அறி.இ; க.மு.

புரப்பாசிரியர்கள்
தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)
தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)
கலைக்கோயில் மாணிக்கம் (சிங்கை)
தென்மொழி ந. முத்துக்குமரன் (தமிழ்நாடு)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்,
[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும், பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.]

மகாலிங்கம் கூட்டிய புராணவியல் கருத்தரங்கு!



சென்னையில் கடந்த (பெப்ருவரி) 16, 17, 18-ஆம் நாட்களில் தொழில் தலைவர் பொள்ளாச்சி திரு. நா. மகாலிங்கம் அவர்கள், **வரலாற்றுக்குத் துணை செய்யும் புராணவியல், வானியல் கருத்தரங்கம்** (Seminar on Astronomical and Puranic data as aids to history) என்னும் பெயரில் ஒரு கருத்தரங்கத்தைக் கூட்டினார். இக்கருத்தரங்கை இவர் எதற்காகக் கூட்டினார் என்பது பற்றி இவர் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார். அவ்வறிக்கையில் இக்கருத்தரங்கின் பல்வகை நோக்குகளையும், கண்டுபிடிக்க வேண்டிய தீர்மானிப்புகளையும், அவற்றின் பயன்களையும் வெளியிட்டுள்ளார். அவற்றுள் முகாமையானவை சில கீழே தரப்பெறுகின்றன.

1. இராமாயணத்தில் வரும் வானியல் குறிப்புகள், அதன் காலம் கி.மு. 4100 என்றும், மகாபாரதக் குறிப்புகள் அதன் காலம்

கி.மு. 3100 என்றும் உறுதி செய்கின்றன. இவ்விரு **இதிகாசங்களை வெறும் கட்டுக்கதைகள்** என்று கூறிவரும் மேலை நாட்டு அறிஞர்களின் கூற்றுகளை அடியோடு இக்கருத்தரங்கம் புறக்கணிக்கிறது.

2. தொன்மங்களில் (புராணங்களில்) சில வ ர லா ற் று க் குறிப்புகள் உள்ளன. அவற்றை வ ர லா ற் றி ல் இணைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

3. திராவிடர்கள், ஆரியர்கள் இருவரும் வெளியே இருந்து இந்தியாவிற்கு வந்தவர்களே. திராவிடர் கி.மு. 2000-த்திலும், ஆரியர் கி.மு.1500 இலும் இந்தியாவிற்கு வந்தனர் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுவது தவறு. இருவரும் இந்தியாவின் குடிமக்களே.

4. கி.மு. 6000-த்தில் அகத்திய முனிவர் தமிழ்மொழிக்கு இலக்கணம் செய்தார். மூன்று தமிழ்க் கழகங்களில் முதல் கழகம் கி.மு. 5800 முதல் 4800 வரையிலும், இரண்டாவது கழகம் கி.மு. 4800 முதல் 2800வரையிலும், மூன்ருவது கழகம் கி.மு. 2800 முதல் கி.மு. 500 வரையிலும் இருந்தன பற்றிக் கருத்தரங்கு ஆராய்ந்து முடிவு செய்யும். அத்துடன் இலெமூரியா என்று சொல்லப் பெறும் குமரிக் கண்டம் பற்றியும் ஆராயப் பெறும்.

5. திரு. பாலகங்காதர திலகர் கூற்றுப்படி ரிக்வேத காலம் கி.மு. 6000 என்பதே உண்மை.

6. ஆரியர் என்ற சொல் ஓர் இனத்தைக் குறிக்கவில்லை. அப்படிச் சொல்வது மிகப் பெரும் கரிசு (பாவம்). அரவிந்தர், விவேகானந்தர், பி.கே. முகர்சி, நாமக்கல் இராமலிங்கம் (பிள்ளை), ஈராசு அடிகள் போன்ற சிறந்த அறிவுலக மேதைகள் (!) எல்லாம் ஆரியர் என்ற சொல்லை ஒழுக்கத்தில் உயர்ந்தவர்களைக் குறிக்கவே பயன் படுத்தியுள்ளனர்.

7. கருத்தரங்கம் எடுத்த முடிவுகளை நடுவண், மாநில அரசுகளும், பல்கலைக் கழகங்களும் ஏற்றுக் கொள்ளும்படி செய்ய ஓர் அறிஞர் குழுவை அமைத்து, ஆங்காங்கு அனுப்புதல் வேண்டும். அத்துடன் இப்பொழுதுள்ள மேலைநாட்டினர் எழுதியுள்ள பொய்யான, கற்பனையான, தவருன வரலாற்று நூல்களை அப்புறப்படுத்தி, இனி பாரதியப் பண்பாட்டிற்கு உகந்த முறையில் புதிய வரலாற்று நூல்களை எழுதுதல் வேண்டும்.

—இவையே அக்கருத்தரங்கின் முகாமையான நோக்கங்களாகவும் செய்யவேண்டிய செயல்களாகவும் அறிவிக்கப் பெற்றுள்ளன. இவற்றின் அடிப்படையில் கருத்தரங்கைக் கூட்டியவர்களுக்கும், கூட்டச் செய்தவர்களுக்கும், அங்குக் கூடிக் கருத்துகளை வெளியிட்டவர்களுக்கும் தலையாய மூன்று உள் நோக்கங்கள் இருப்பனவாகத் தெரிகின்றன.

1. இந்திய ஒருமைப் பாட்டுக்கு உகந்தபடி ஏற்கனவே உள்ள வரலாற்றை மாற்றி யெழுதுவது.

2. ஆரியத்திற்கும் சமசுக்கிருதத்திற்கும் அளவிறந்த வர லாற்று மதிப்பையும், பழம் பெருமையையும் உயர்ச்சி யையும் தருவது.

3. புராண இதிகாசங்களை உண்மை என்று உலகுக்கு உணர்த்துவது.

—இம்மூன்று உள்நோக்கங்களையும் உறுதிப்படுத்திக் கொண்டு, நடுவணரசின் சில பார்ப்பனீயப் பின்னணியுடன், சில தென்னகப் பார்ப்பனர்கள் இளித்தவாய்த் தமிழர்கள் சிலரைப் பயன்படுத்திக் கொண்டு, இக்கருத்தரங்கைக் கூட்டி, அதற்கு வரலாற்று வலிவை யூட்டி, அரசுக்குப் பரிந்துரைத்துள்ளனர். முந்தைய ஆட்சியில் இந்திரா காந்தி புதைத்த வரலாற்றுப் பெட்டகம் போன்ற ஒரு புது வரலாற்றுப் புனைந்துரை உருவாக்க முயற்சி இது.

முதற்கண் இக்கருத்தரங்கு ஒர் அறிவியல் கருத்தரங்கோ வானியல் கருத்தரங்கோ ஆகாது என்பதை இதில் படிக்கப் பெற்ற கட்டுரைகளைப் பார்த்தால் எளிதில் விளங்கும். இதில் தொடர்பு கொண்டவர்கள் ஒரிருவர் தவிர அனைவரும் பத்தரை மாற்றுக் குறையாத பச்சை ஆரியப் பார்ப்பனர்கள். அவர்கள் முற்றும் அறிவியல் தொடர்புள்ள அறிஞர்களும் அல்லர். இவர்களைப் போல ஆயிரக்கணக்கான (எம்.ஏ; பி.எல் படித்த) வழக்கறிஞர்கள், (பி.ஈ. படித்த பொறியாளர்கள்), பழம் பொருள் ஆராய்ச்சியாளர்கள், (பி.ஏ; எல்.டி படித்த) ஆசிரியர்கள், (பி.எசி.) அறிவியலாளர்கள், கணியம் தெரிந்த சில கணியர்கள் ஆகியோரைக் கூட்டி இவர்கள் தெரிவித்த கருத்துக்கள் அனைத்தும் வீணான சொத்தை வெற்றுரைகள் என்று முறியடித்துக் கூறுவதற்கு நம்மவர்களால் முடியும். ஆனால் இவற்றைச் செய்வதற்கு நமக்குச் சில மகாலிங்கத் தமிழர்கள் (!) முன் வர மாட்டார்கள். ஏனெனில் அப்படிப் போன்றவர்களின் தொழிலியல் ஊழல்களை இது போலும் முயற்சிகளால்தாம் திரை போட்டு மறைத்துக் கொள்ள முடியும். இனி, பண வலிவையும் தேசியப் புரட்டுகளையும் அடிப்படையாகக் கொண்டு ஏற்கனவே உள்ள வரலாற்று முடிபுகளையும் கருத்துகளையும் எளிதாக மாற்றியமைத்து விட முடியும் என்பதற்கு இக்கருத்தரங்கே ஏற்ற சான்றாக அமை கிறது.

இக்கருத்தரங்கில் படிக்கப் பெற்ற கட்டுரைகளில் உள்ள கருத்துகள் அனைத்தும் தமிழ் மொழிக்கும் தமிழர்களுக்கும் ஒரு வகையில் ஏற்றம் காட்டுவன போல் தோன்றினாலும், அவை இறுதியில் ஆரியத்துக்கே முற்றும் ஊட்டம் அளிக்கின்றன என்பதைச்சற்று மேலோட்டமாகப் பார்ப்பவர்களும் நன்கு உணர்ந்து கொள்ள முடியும். இக்கருத்துகள் தொடர்பான கட்டுரைகளை எழுதிய

பார்ப்பனர்களில் க. சிரிநிவாச இராகவன், G.S.சம்பத்துஅய்யங்கார், V.G.இராமசந்திரன், G.S.சேசகிரி ஆகியோர் முகாமையானவர்கள். இவர்கள் படித்த கட்டுரைகளில் கூறப்பெறும் கருத்துகள் வியப்பானவையும் வேடிக்கையானவையும் ஆகும். மகாபாரதத்தில் திரௌபதி தன்தேர்வுமணம் (சுயம்வரம்) நடைபெற்ற பொழுதும், இராமாயணத்தில் இராமனின் முடிசூட்டு விழாவின் பொழுதும் முறையே அவற்றுக்குத் தென்னாட்டிலிருந்து சேர, சோழ, பாண்டியர்கள் வந்திருந்தனர் என்று வியாசரும், வால்மீகியும் எழுதியுள்ளனராம். சேர, சோழ, பாண்டியர்கள் தென்னாட்டு அரசர்களாம். எனவே இதில் கூறப்பட்ட செய்திகள் எதுவும் பொய்யாக இருக்க முடியாது; முற்றிலும் உண்மையே என்பது இவர்கள் முடிபு. அதே போல், இப்பொழுதுள்ள புராணக்கதைகளில் பெயர்கள் குறிக்கப் பெற்ற பரீக்சித்து, செனமேசெயா முதலிய அரசர்களும் உண்மையாகவே அக்காலத்தில் இந்திய நாட்டை முழுமையாகவோ, பகுதியாகவே, ஆண்ட அரசர்களே என்று கூறி, அவர்களின் காலத்தையெல்லாம் தம் மனம் போன போக்கில் கணக்கிட்டு வரையறுத்துக் கொடுத்துள்ளனர். இது தொடர்பான முந்தைய மேலைய வரலாற்று ஆசிரியர்களின் அரிய கருத்துகளையெல்லாம் புறக்கணித்துப் புறந் தள்ளி, அவை இந்தியரைப் பிரித்தாளுகின்ற சூழ்ச்சியில் எழுதப் பெற்றவை என்று இக்கட்டுரையாளர் நால்வரும் அடித்துத் தள்ளியிருக்கின்றனர்.

மகாபாரதத்தில் உள்ள கிருட்டிணர் பிறந்த பிறப்புக் குறிப்புகளையும் இராமாயணத்தில் இராமர் பிறந்த பிறப்புக் குறிப்புகளையும் கொண்டு அவற்றின் காலத்தை, கி.மு. 4100 என்றும் கி.மு. 3100 என்றும் வரையறுத்திருப்பதுடன், அவற்றில் கூறப் பெறும் அனைத்துச் செய்திகளும் முற்றும் உண்மையே என்றும் முடிவுச் செய்கின்றனர், இவ்வரலாற்று மேதைகள். அநுமன் இந்தியாவை விட்டு இலங்கைக்குப் புறப்பட்டது, அவன் இலங்கை சேர்ந்தது, இராவணனைப் பார்த்தது, திரும்பியது; பின் இராமன் புறப்பட்டது, போர் நடந்தது, இராவணனை வெற்றி கொண்டது. பின் அயோத்திக்குத் திரும்பி முடிசூட்டிக் கொண்டது ஆகிய எல்லா நிகழ்ச்சிகளையும் நடந்த ஆண்டு, மாதம், நாள், மணி ஆகியவற்றுடன் மிகவும் துல்லியமாக நேரில் பார்த்தவர்கள் போல் இவர்கள் எடுத்துக் காட்டியிருக்கின்றனர். இவற்றுக் கிடையில் தமிழ்மொழி கி.மு. 8000 ஆண்டில் தோன்றியது என்று கூறி, அதற்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னமேயே, அஃதாவது கி.மு. 10000-இலேயே சமசுக்கிருதம் தோன்றிவிட்டது என்றும், வாயடி வழக்காக எல்லாரும் நம்பும் படியாக நன்கு புளுகியிருக்கின்றனர்.

இனி, இவர்தம் கண்டுபிடிப்புக் கருத்துகளை யெல்லாம் உண்மையான வரலாறு என்றும், இவற்றை இந்திய வரலாற்றில் இணைக்க வேண்டும் என்றும், இப்பொழுதுள்ள இந்திய வரலாறெல்லாம் மேலை

நாட்டு அறிஞர்கள் கூறிய பொய் வரலாறுகள், கற்பனைகள் என்றும், அவற்றை அடியோடு ஒழித்துவிட்டு இனி இந்தியாவுக்கே (அஃதாவது பாரதத்திற்கே) புத்தம் புதிய, ஏற்றம் மிகுந்த, ஒருமைப்பாடு நிரம்பிய வரலாற்றை எழுதி அதை உலகமெல்லாம் பரப்ப வேண்டும் என்றும், அவ்வரலாறுகளைத்தாம் இந்திய மாணவர்களைப் படிக்கச் செய்யவேண்டும் என்றும் இவர்கள் இக்கட்டுரைகளில் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

வி. சி· இராமச்சந்திரன் என்னும் ஆரியப் பார்ப்பனர் தம் கட்டுரையில் பல விடங்களில் பார்ப்பன குல தருமக் கருத்துகளைக் கூறி அவற்றுக்கு வரலாற்று வலிவை உண்டாக்கியுள்ளார். அவற்றுள் சில கருத்துகள் வருமாறு:

In fact sage Vashista urged Bharatiyas to go and spread our ancient Arya Dharma all over the universe-'Krivanta Visvam Aryam'. Arya is only 'Shreshta' in Dharma (i.e.) Excellence in one's own "Kula Dharma". Sage Vashista and his disciples are said to have gone on sea voyage in 6000 B.C. towards European countries also to establish on Dharma"

(உண்மையில் வசிட்ட முனிவர் பாரதியர்களை உலகமெல்லாம் சென்று, தம் பழமையான ஆரிய தருமங்களை—'**கிரிவந்த விசுவம் ஆரியம்**' (ஆரிய தருமங்களே மேலானவை)—அஃதாவது ஒருவன் தன் குல தருமங்களில் சிறந்தவை —என்னும் கருத்தைப் பரப்புமாறு வற்புறுத்தினர். அப்படியே வசிட்ட முனிவரும் அவருடைய மாணவர்களும் கடல் வழியாக, கி.மு. 6000-ஆம் ஆண்டில் ஐரோப்பிய நாடுகளை நோக்கித் தம் கருத்துகளை நிலை நாட்டச் சென்றனர் என்று சொல்லப் பெறுகிறது)

'The term 'Arya' means only Dharma and not a race. All of you are Aryas (i.e. all castes in the Hindu fold) so long as you keep to your own Swadharma which is your Kula Dharma'

('ஆரிய என்னும் சொல் **தர்மம்** என்று பொருளாகுமே தவிர ஓர் இனத்தைக் குறித்ததாகாது. நீங்களும், அஃதாவது இந்து மதப் பிரிவில் அடங்கும் எல்லாச் சாதியாரும், அவரவர் தருமங்களை அஃதாவது குல தருமங்களைக் கடைப்பிடிக்கும் வரையில், ஆரியர்களே')

'Arya is 'Shresta in Dharmic Conduct as was Prevalant according to Shastras and one's own Kula Dharma'

(நடை முறையிலுள்ள முன்னைய சாத்திரங்களின் படியும் குல தருமப் படியும் எவன் மேலாக ஒழுகி வருகிறானோ அவன் ஆரியன்.)

எப்படி? கருத்தரங்கின் நோக்கம் நன்கு விளங்குகிறதா? 'வருணச்சிரம தருமங்களை' மீண்டும் தூக்கி நிலைநிறுத்தி, அவற்றை வலியுறுத்தும் புராண இதிகாசங்களுக்கு வரலாற்று வலிவையூட்டி, அவற்றை இவ்விந்திய நாட்டு மக்களிடையில் மீண்டும் நிலை நாட்டுவதே இக்கருத்தரங்கைக் கூட்டியவர்களின்-அவர்களின் பின் நிற்பவர்களின்-நோக்கமாக இருத்தல் வேண்டும் என்பதற்கு இவற்றைவிட வேறு சான்றுகள் தேவையில்லை. இவர்களைப் போன்ற வர்களின் இத்தகைய கருத்துகள் எத்தனையோ மேலைநாட்டு, நம் நாட்டு, அறிஞர்களால் தூள்தூளாக்கப் பட்டுள்ளன. இவர்கள் இப் பொழுது மீண்டும் கூடி, அவற்றிற்கு உயிர்ப்பூட்ட முயற்சி மேற் கொண்டிருக்கின்றனர்.

இனி இக்கருத்தரங்கில் படிக்கப்பெற்ற கட்டுரைகளில் தமிழ் மொழிக்குப் பெருமை தருவதுபோல் சில கருத்துகளைக் கூறி, அதற்குமேல் சமசுக்கிருதத்தைத் தூக்கி உயர்த்தி வைத்துள்ளனர். அதுபற்றிய கருத்துகள் வருமாறு.

'Tamil always kept up its separate identity and was verily the younger sister of Sanskrit. If Sanskrit was 10000 years old, Tamil is now 8000 years old.

(தமிழ்மொழி எப்பொழுதும் தன் தனித்தன்மையையும் சமசுக் கிருதத்திற்குத் தான் தங்கை என்பதையும் கட்டிக்காத்து வருகிறது. சமசுக்கிருதம் பத்தாயிரம் ஆண்டு முதுமையானதென்றால் தமிழ் எட்டாயிரமாண்டு முதியது.)

'The coexistence of Sanskrit and Tamil for over 8000 years. This appears too essential to establish the homogeniety of our Bharatya culture of which Sanskrit and Tamil are but the two ancient inseparable segments'

(சமசுக்கிருதமும் தமிழும் 8000 ஆண்டுகளாகவே ஒத்து வாழ்ந்த தன்மையுடையவை. சமசுக்கிருதம் தமிழ் என்னும் இவ் விரண்டும் பழமையான பிரிக்கமுடியாத கூறுகள், பாரதியப் பண் பாட்டை நிலை நாட்டுவதற்கு இன்றியமையாதவை என்று தோன்று கிறது.)

—இத்தகைய கருத்துகள், 'நீ அரிசி கொண்டு வா; நான் உமி கொண்டு வருகின்றேன். இரண்டையும் கலந்து இருவரும் ஊதிஊதித் தின்னலாம்' என்னும், ஏமாற்றைப் புலப்படுத்தும் பழைய கதைப் பழமொழியை நினைவூட்டுகின்றன. ஐம்பதினாயிரம் ஆண்டுகட்கு முன் தோன்றிய தமிழ்மொழி எங்கே, அந்தத் தாய்மொழியினின்று கி.மு. 2500 வாக்கில் தோற்றுவிக்கப் பெற்ற சமற்கிருதமெங்கே. இரண்டையும் ஒன்றாக இணை வைத்து, பின்தோன்றிய செயற்கை மொழியாகிய சமசுக்கிருதத்தின் தங்கையாக மூன் தோன்றிய

இயற்கை மொழியாகிய தமிழைக் காட்டும் பார்ப்பனரின் புல்லிய அறிவையும் ஏமாற்றையும் சூழ்ச்சியையும் என்னென்பது?

மேலும் இப்பார்ப்பன ஆசிரியர்கள் எழுதிய கட்டுரைகளில், இந்தியாவை, **'ஆரிய நாடு' ஆரிய தேசம்** என்று எழுதிய பாரதியார் அளவுக்கு மீறிப் புகழப் பெறுகிறார். **(Many Tamil scholars have stated the whole of India is Arya Varta (i.e.) Arya Desa or Arya Nadu).** 'ஆரியராவது திராவிடராவது' ஆரியர் என்பாரும் இல்லை; திராவிடர் என்பாரும் இல்லை' என்று கூறிய நாமக்கல் பாவலர் இராமலிங்கம் 'மேதை' என்றும், துணிவுள்ள, உரமுள்ள, புரட்சியுணர்வுள்ள புகழ்பெற்ற அறிஞர் **(A brave and robust outburst of the famous Namakkal Kavignar)** என்றும் பாராட்டுப் பெறுகிறார். ('அரசன் முத்தினால் அரம்பை' என்னும் பழமொழிக்கு ஏற்ப, நாமக்கல்லார் எதற்காக அரசவைப் புலவர் என்று பேராயக் கட்சியால் பாராட்டப் பெற்றார் என்பதும் அவர் பாத்திறனும் எல்லாருக்கும் தெரிந்தவையே!)

முடிவாக இக்கருத்தரங்கில் ஒரு புதுமையுமில்லை; புரட்சியும் இல்லை. பார்ப்பனர்கள் தாம் இழந்துவரும் பழம்பெருமையை நிலை நாட்டிக் கொள்ள ஒரு தேசியப் போர்வையாகவும் ஒருமைப் பாட்டுணர்வு மேடையாகவும் இதைப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். இதற்குப் பெயரும் புகழும் விரும்பும் சில ஏமாளிச் செல்வர்கள் துணையாகவும் அணையாகவும் பயன்படுத்தப் பெற்றுள்ளனர்.

மற்றபடி ஆரிய திராவிட இனப் போராட்டங்களும் வேறுபாட்டுணர்வுகளும் இன்று நேற்று தோன்றியவையல்ல. ஆரியப் பார்ப்பனர் தம் கரவாலும், சூழ்ச்சியாலும், மந்திர தந்திர முயற்சிகளாலும் இன்றைக்கும் அவை உயிர் பெற்றே திகழ்கின்றன. பார்ப்பனீயம் தமிழர்களுக்கு—திரவிடர்களுக்குச் செய்த—செய்து வரும் தீமைகள், கொடுமைகள், நச்சுச் செயல்கள் இன்றைக்கும் பச்சைப் பசுமையாகவே இருக்கின்றன. இல்லையென்று சொல்லிவிட முடியாது. இன்றும், அவர்கள் தமிழ்மொழிக்குச் செய்துவரும் கேடுகளையும் அறவே மறைத்து விடவும் முடியாது. அவர்கள் குருதியிலேயே ஊறிப்போன கொடுமை நஞ்சுகள் இவை. இவற்றையெல்லாம் மறுப்பதற்கென்றே-மறைப்பதற்கென்றே நடைபெறும் பல வடிவான முயற்சிகளுள் இக்கருத்தரங்கும் ஒன்று. இது போன்றவற்றிற்கு மகாலிங்கம் போலும் தமிழ்ச் செல்வர்கள் துணை போவது அவர்களுடைய இன இரண்டகத்தையே காட்டும். மேலும் மேலும் அரசுத் துணையோடு தம் செல்வ வளங்களைப் பெருக்கிக் கொள்ளவே முயற்சி செய்கிறார்கள் என்பதையே உறுதிப்படுத்தும். உண்மையை மூடி மறைக்கும் முயற்சிகள் எத்துணைப் பொருள் வலிவு, அரச அதிகார வலிவு படைத்தவாயினும் என்றைக்கும் தோல்வியடைந்தே தீரும். வெறும் மேற்பூச்சு மருந்துகளாலும், இதுபோலும் பொம்மை நாடகங்

களாலும், மெலுக்குப் பேச்சுகளாலும் பார்ப்பனீயத் தீமை ஒழிவ தன்று. இவ்வகைப் போலி முயற்சிகளால் இவர்கள் எந்த வேத, புராண, இதிகாசங்களை நிலைநிறுத்தப் பார்க்கின்றனரோ அவற்றையே ஒழித்தால்தான் தமிழர்களின் வாழ்க்கை ஒளி பெறும்; அடிமை நிலை மாறும்; துயரங்கள் தீரும்.

இறுதியாக மகாலிங்கங்களுக்கு ஒரு சொல். இதுபோலும் உப்புச் சப்பற்ற முயற்சிகளில் ஈடுபடுத்த உங்களைப் போலும் பலரின் செல்வங்கள் பயன்படலாம். இதனால் எல்லாம் உங்களுக்கு ஊதியம் வரலாம்; பேரும் புகழும் தற்காலிகமாகக் கிடைக்கலாம். ஆனால் நீங்கள் செய்யும் இனஅழிவு முயற்சிகளை இந்தத் தமிழினம் என்றைக்கும் மறக்காது; மறைக்காது; என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தமிழர்கள் இதுபோலும் இனஅழிவு முயற்சிகளில் ஏமாளிகளாக இல்லாமல், எச்சரிக்கையாக இருப்பார்களாக.



பெருஞ்சித்திரனாரின்

பாடல் தொகுப்புகள்.

(கனிச்சாறு தொகுப்புகள்)

அரிய பாடல் களஞ்சியம்!

தொடக்கக் காலத்திலிருந்து 1978-ஆம் ஆண்டு வரை எழுதப் பெற்றுத் தென்மொழி, தென்றல், முல்லை, பகுத்தறிவு, தமிழ்நாடு, வானம்பாடி, செந்தமிழ்ச்செல்வி, விடுதலை, தமிழ்ப்பொழில் முதலிய இதழ்களில் வெளிவந்துள்ளனவும், வராதனவுமாகிய பன்னூற்றுக் கணக்கான தலைப்புகளின் கீழ் ஆயிரக்கணக்கான பாடல்கள் ஒரு சேரத் தொகுக்கப் பெற்று நான்கு தொகுதிகளாக அச்சேறி வருகின்றன.

தீங்கனிச்சாறு! தெவிட்டாத தூய இனிய செந்தமிழ்ப் பெட்டகம்;
என்றென்றும் வைத்துப் போற்றவேண்டிய இலக்கியப் பாச்சுரங்கம்!
வெளியீட்டு நன்னாளை விரைவில் எதிர்பாருங்கள்!

புதுவைத் தனித்தமிழ்க் கழக ஆண்டுமலர்!

"பாவாணர், பாவலரேறு ஆகியோரின் கட்டுரைகள் கொண்ட தனித்தமிழ்க் கழக ஆண்டுமலர் அணியமாக உள்ளது. 0.50 காசு அஞ்சல் தலை அனுப்பி இலவயமாகப் பெற்றுக் கொள்க.

செயலாளர், தனித்தமிழ்க் கழகம்,
168, மாரியம்மன் கோயில் தெரு, தட்டாஞ்சாவடி, புதுச்சேரி-9"

நூல் நிறை

நூல்: **பாவேந்தர் ஊட்டிய தமிழுணர்வு.**

ஆசிரியர்: **க. தமிழமல்லன்.**

வெளியீடு: 168, மாரியம்மன் கோயில் வீதி.
தட்டாஞ்சாவடி. புதுச்சேரி-605009.

பக்கம்: 24. விலை: **60 காசு.**

பாவேந்தர் பாரதிதாசனிலிருந்துதான் இழந்து போன தமிழ் உரிமை மீட்கப் பெறுகின்ற முயற்சி வலிவு பெறுகின்றது என்று சொல்லலாம். அதற்கு முன் அம் முயற்சி ஒரு முளையளவாக அல்லது ஒரு செடியளவாகவே இருந்தது. பாவேந்தர் பாடல்களை நன்கு ஆய்ந்த திரு.**க. தமிழமல்லன்** தமிழுணர்வு கொளுத்திய பாடல்கள் எந்தெந்த அளவில் எந்தெந்த வடிவில் சுடர்விடுகின்றன என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார் இந்நூலில். நூல் சிறிய அளவாக இருப்பினும் பெரும்பயன் தரக் கூடியது. 'மொழியைப் பற்றியஉணர்வு மறைந்து விட்டால் அந்தமொழிக்குரிய குமுகாயமே அழிந்து விடும்' என்பதை ஆசிரியர் எடுத்துக்கூறி, அக்கருத்தைத் தம் வலிந்த பீடுரைகளால் நிலை நிறுத்துகின்றார். பாவேந்தரின் இலக்கிய உணர்வை மட்டும் பரப்பியும் பாராட்டியும் விட்டு, அவரின் புரட்சிக் கருத்துகளை மறைக்கப் பார்க்கின்ற ஒரு கொடுமை முயற்சியின் தலையை நசுக்குகிறது இந்நூல். **தமிழமல்லனின்** முதல் முயற்சியாகிய இச்சிறு நூலிலேயே அவரின் தமிழ்வீறு தெற்றெனப் புலப்படுகின்றது. பாவலரேறு அவர்களின் அணிந்துரையைத் தாங்கி வெளிவந்துள்ள இந்நூல் அதன் நோக்கில் முழுப் பயன் தருகின்றது.

—**குரிசில்.**

நூல்: **தனித் தமிழ்க் கழக முதலாம் ஆண்டு மலர்**

வெளியீடு: தனித்தமிழ்க் கழகம், 168, மாரியம்மன் கோயில் தெரு,
தட்டாஞ்சாவடி, புதுச்சேரி-605009.

விலை: குறிக்கப் பெறவில்லை.

புதுச்சேரி தனித்தமிழ்க் கழகத்தின் முதலாம் ஆண்டு மலராக மலர்ந்ததிந் நூல். இதில் இருபத்துமூன்று கட்டுரைகள் உள.

மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் முதலிய அறிஞர்களின் அனைத்துக் கட்டுரைகளும் அறிவுக்கு விருந்தாயமைந்துள்ளன. சில பாடல்களில் யாப்புப் பிழைகள், சொல் வழுக்கள் உள்ளன. புது நோக்குக் கட்டுரை-பாடல்கள் இன்னும் ஆய்ந்து தேர்ந்து தொகுத்திருக்கலாம். தனித்தமிழ்க் கழகத்தின் செயலாக்கப் பணிகள் பல. இன்றோ "ஆண்டு மலரும்", வெளியிட்டு அரும் பணியாற்றியுள்ளனர். கழகத்தார் முயற்சி மிகச் சிறப்புடையது. பாராட்டுகிறோம். தமிழர் இம்மலரை வாங்கிக் கற்று நற்பயன் பெறுவாராக!

—**அரசியல் நோக்கன்.**



நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

பாட்டு. சச.

எள்ளாடு செக்கர் நெய்கழி ஈமென்று
உள்ளத் துவப்பின் ஓங்குதிமில் எருத்தம்
ஒய்யென் னோசைக்கு உறங்கியாங் குலவரும்
செய்யூர்க் கொண்டல் மெய்யிலா னெனினும்
பொய்வழங் கிலனே தோழி தொய்குழல்
நெய்வீப் பெய்யும் நாளுமொன் றுண்டே!

பொழிப்புரை: எள்ளைச் செக்கிலிட்டு ஆட்டுகின்ற செக்கர், இறுதியில் எள்ளில் உள்ள நெய்யைப் பிழிந்து கொண்டு, அது கழிந்த கழிவாகிய பிண்ணாக்கைத் தனக்குத் தருவர் என்னும் உள்ள உவப்புடன், ஓங்கிய திமிலையுடைய எருது, செக்கு ஆடுதலால் தோன்றிய 'ஒய்'யென்னும் ஓசையைக் கேட்டவாறு உறக்கம் கொண்டு சுழன்று வரும் தன்மையுடைய, வயல்கள் சூழ்ந்த மருத நிலத்தலைவன், எனக்கு மெய்யாக நடக்கிலான் எனினும் பொய் கூறும் தன்மையன் அல்லன், தோழி, அவிழ்ந்து தொய்ந்து கிடக்கும் என் கூந்தல் நெய்யும் பூவும் சொரிந்துகொள்ளும் நாளும் ஒன்று உண்டு.

விரிப்பு: இப்பாடல் அகத்துறையைச் சார்ந்தது.

'நெய்யும் பூவும் இல்லாமல் நின் கூந்தல் இவ்வாறு அவிழ்ந்து பாரிக் கிடத்தல் என்ன' என்று வினவிய தோழிக்குத் தலைவி இது கூறினாள் என்க.

'எள்ளைச் செக்கிலிட்டு ஆட்டுகின்ற மருத நிலத்தைச் சார்ந்தவன் என் தலைவன். அவன் ஊர் வயல்கள் நிறைந்த செய்யூர். எனவே அவன் கொண்டல் என்னும் பெயர் பெற்றான். அவன் இக்கால் என்னைத் துறந்து, என் நலமும் இழந்து, அயற் பெண்ணொருத்தியின் மயல் மேற்கொண்டு புறவொழுக்கம் கொண்டான். அவனின் பொருள் தீரும் வரை காதல் காட்டி, அவனை அவள் கை நெகிழ்க்கும் நாள் ஒன்று வரும். அக்கால் அவன் என்னை நாடி வருவான். அது போழ்து யானும் நெய் சொரிந்து தலைவாரிப் பூச்சூடி மகிழ்வேன் என்று தலைவி விடையாகக் கூறியது இப்பாட்டு.

தலைவி குறிப்பாகக் கூறும் விடையில் அவள் தனிமைத்துயரும் தலைவனின் புறவொழுக்கமும், அவன் மேல் உள்ள பழியும், அவன் மேல் இவள் வைத்த அன்பும் நம்பிக்கையும் தெளிவாகப் புலப்படுகின்றன.

எள்ளாடு செக்கர்: எண்ணெய்க்காக எள் ஆடுகின்ற செக்கையுடைய செக்கர்.

நெய்கழி ஈமென்று: நெய் கழிந்த எச்சத்தை (பிண்ணுக்கை)த் தனக்குத் தருவர் என்று கருதி. நெய்கழி – பிண்ணுக்கு.

உள்ளத்து உவப்பின்: உள்ளத்தெழுகின்ற மகிழ்ச்சியொடு.

ஓங்கு திமில் எருத்தம்: உயர்ந்த திமிலை உடைய எருது.

'ஒய்'யென் ஓசைக்கு: செக்கு ஆடுதலினுல் எழும் 'ஒய்' என்னும் ஓசையினுக்கு (செவி தந்து)

உறங்கியாங்கு உலவரும்: (அவ்வோசையைக் கேட்டபடி) கண்களை மூடியவாறு தூங்குவது போல் அச்செக்கைச் சுற்றி வரும்.

செய்யூர்: வயல்களையுடைய செய்யூர் என்னும் பெயரிய ஊரைச் சார்ந்த.

கொண்டல்: மருத நிலத்தலைவன். (மேகம் போன்ற தலைவன். கொண்டல்—மழையைக் கொண்டு வரும் மேகம்.)

மெய்யிலானெனினும்...தோழி: எனக்குத் தான் எங்குச் செல்கின்றுன் என்னும் மெய்யை உரைக்காது (பிறள் ஒருத்தியிடம்) சென்றுன் எனினும், 'வருவேன்' என்று கூறிவிட்டுப் போனபடி வருவான்; அவன் பொய் வழங்கிலான், தோழி! என்றவாறு.

'அவன் சென்றவிடத்தை எனக்குக் கூறிலன் ஆகையால் அவன் மெய்யில்லாதவன் ஆயினும், அவன் பொய்யும் உரையான் ஆகையால், வருவேன் என்றுரைத்தபடி வருவான்' என்று நம்பிக்கையுடனும் அன்புடனும் கூறினுள் என்க.

தொய்குழல்: நெய்யிலாது அவிழ்ந்து பரந்த என் கூந்தல்.

நெய்வீப் பெய்யும்...உண்டே!: நெய்யும் பூவும் ஒருசேரப் பெய்து கொள்ளும் நாளும் ஒருநாள் உண்டு; அதுவரும்—என்றுள் என்க.

இதில், **நாளும் ஒன்று உண்டு** என்றதால் உறுதியும், **பொய் வழங்கிலனே** என்றதால் அன்பும், **மெய்யிலான்** என்றதால் சினமும், **கொண்டல்** என்றதால் அவன் தனக்குக் காலத்தாலும் இடத்தாலும் பொழிதல் இலாதவன் எனக்குறித்த ஏக்கமும், அவனின் ஊர் **செய்யூர்** என்றதால் அவனின் விளைவு சான்ற செல்வ நிலையும், அவ்வயல் போல் தான் அவன் பொழிவுக்கு ஏங்கி நின்ற காதல் குறிப்பும் குடும்ப நோக்கமும் புலப்பட உரைத்தாள் என்க.

இனி, **எள்ளாடு செக்கர்** என்றவழி, எள்ளை ஆட்டிப் பிழிந்து கொள்வது போல், தலைவனைக் காதல் உணர்வினுல் ஆட்டிப் பொருளைப் பிழிந்து கொள்ளும் அயலாளது உளநிலையும், **நெய்கழி ஈயுமென்றதால்**, தலைவனது பொருளாகிய சாற்றைப் பிழிந்து கொண்டு எஞ்சியுள்ள சக்கைபோல் தலைவனை மட்டில் தனக்கவள் தருவாள் என்னும் எதிர்பார்ப்பும், பொருள் நீங்கிய பின்னேனும் அவன் தனக்குக் கிடைப்பான் என்னும் தலைவியது உள்ள உவப்பும், **ஓங்கு திமில் எருத்தம்** என்றதால் பெருமை சான்ற அவள் கற்பும், **ஒய்யென் ஓசைக்கு உறங்கியாங்கு உலவரும்** என்றதால்

ஊரார் அவனை உரைத்த பழிகேட்டவாறு, இயக்க மற்றவளாய் அவள் இல்லிருந்து உலவுவதும் புலப்பட்டன என்க.

எள்ளை ஆட்டி எண்ணெயைப் பிழிந்து கொள்ளும் செக்கர் போலும், தலைவனது புறவொழுக்கக் காதலி, தலைவனைக் காதலுணர்வால் ஆட்டி அவன் கைப்பொருளைப் பறித்துக் கொள்வாள். ஆயினும், அவ் வெண்ணெயைப் பிழிந்து கொள்ளும் செக்கர் எஞ்சிய நெய்கழியையேனும் அவ்வெருதுக்குத் தருவதுபோல், அக்காதலியும் தன் தலைவனை வெறுங்கையனாகவேனும் தனக்குத் தருவாள். எனவே அதுவரை அவன் வருவான் என்னும் உள்ள உவகையுடன், செக்கை இழுக்கும் எருது, அது சுற்றப்படுதலால் எழும் 'ஒய்' யென்னும் ஓசையைக் கேட்டவாறு, உறங்கிக் கொண்டே சுற்றி வருதல்போல், தானும் அவன் மேல் ஊரார் உரைக்கும் பழிச் சொற்களைக் கேட்டவாறு புறவுணர்வற்றவளாய்ப் புலனொடுக்கத்துடன் இல்லிருந்து வருகிறாள் தலைவி. வயல்கள் நிறைந்த ஊரின் மேகம் போன்ற தலைவன் அவனாகையால், தலைவிக்கு அவன், மழைமேகம் போல் வேண்டிய விடத்து வேண்டிய காலத்துப் பொழியாதவாறும், வேண்டாவிடத்து அளவின்றிப் பொழியுமாறும், தன்னிடத்து அன்பு மழை பொழியாமல் தன் புறவொழுக்கக் காதலியிடத்துக் காதன் மழை பொழிகின்றான். அவன் தலைவியை விட்டு நீங்குகையில் எவ்விடத்துச் செல்கின்றான் என்று கூறாமல் சென்றானாகையால் அவன் மெய்யிலான் ஆகின்றான். ஆனால் அதேவிடத்து 'வருவேன்' என்றுகூறிப் போந்ததால், அவன் வருவான்; ஏனெனில் அவன் பொய் வழங்காதவன். அவன் வரும் வரை அவள் பெருங்கற்பு தோன்ற இல்லிருக்கின்றாள். என்றெல்லாம் பொருள் விளங்கும்படி அவளேன் நெய்யும் பூவும் சொரிந்து தலை புனைந்து கொள்ளவில்லை என்று கேட்ட தோழிக்கு விடை கூறுகின்றாள், தலைவி என்க.

இது **முல்லை** என் **திணை**யும், புனைந்துகொள் என்ற தோழிக்குத் தலைவன் பொருள் தேடச் சென்றவிடத்துப் பயிலும் புறவொழுக்கத்தால் கவன்று இல்லிருக்கும் தலைவி தன் கற்பு தோன்ற உரைத்தது என்னுந் **துறை**யுமாம்.

"தென்மொழி" சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்:	12 உருபா	24 உருபா	24 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	6 ,,	12 ,,	12 ,,
தனியிதழ்:	1 ,,	2 ,,	2 ,,

ஓரிதழுக்கு உருபா **2** மேனி முன்பணம் கட்டக்கூடிய
விற்பனையாளர்கள் கேட்க!

மக்களவை

மதிப்பைக் குறைத்துவிடும் ஆசிரியவுரை.

0:234: பெருமதிப்புடையீர், வணக்கம், திசெம்பர், சனவரி 79. தென்மொழி இதழைக் கண்டேன். அதில் ஆசிரியர் உரை எழுத்துச் சீர்திருத்தங் குறித்து எழுதப் பெற்றுள்ளது. தங்கள் கட்டுரையின் முற்பகுதியில், ஒரு சிலரைக் கூறத்தகாத சொற்கொண்டு தாக்குவதே மிகுதியாக இடம் பெற்றுள்ளது. அதில் தங்கள் ஒருவர்க்கே தமிழ் மொழிமீது பற்றும், அதன் வளர்ச்சியில் ஆர்வமும் உண்டு என்பது போல் எழுதியுள்ளீர்கள். மற்றும், தங்கள் கருத்திற்கு வேறுபட உரைப்பவரெல்லாம் மடயர்கள். ஆரிய அடிமை, தமிழ் மானங் குறைந்தவர், 'மூதறிவாளர்கள்' மண்டை வீங்கிக் கொண்டல்கள் என்றெல்லாம் கூறியிருப்பது தங்கள் மதிப்பைக் குறைத்து விடுகிறது. இங்ஙனங் கூறுவது "கனியிருப்பக் காய்கவர்த லன்றோ"! பகைவரையும் ஈர்க்கும் இனிய சொற்களன்றோ தங்களைப் போலுங் கொள்கை பரப்புவோர்க்குத் தேவை.

> "இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
> வன்சொல் வழங்கு வது"

என்ற திருக்குறள் தாங்கள் அறியாத ஒன்று?

தங்களால் வசைபாடப் பெற்றவர் அனைவரும் தங்கள் அறிவிற்கு எள் முனையுங் குறைந்தவரல்லர். தங்கள் கருத்துக்கு மாறான கருத்துகளைக் கூறினார்கள் என்பதாலேயே அவர்கள் மண்டை வீங்கிகளாகிவிட மாட்டார்கள். எல்லாருமே தமிழ்மொழி வளர வேண்டுமென்பதிலே ஆர்வ மிக்குடையவரே. எண்ணுகின்ற எண்ணத்தாலும் செல்கின்ற வழியாலும் வேறுபடலாம்.

பெரியார் அவர்களை மொழியியல் பேரறிஞர் என்று சொன்னதாலேயே பாவாணர் அவர்களைத் தாழ்த்தியதாகுமா? பாவாணர் அவர்களையன்றி வேறொருவர் இருக்கமுடியாதா, அன்றி இருத்தல் கூடாதா? பெரியாரை ஒரு மொழியியலறிஞரென்று கூறுதல் பொருந்துமாறில்லை யெனச் சான்று காட்டிக் கூறினால் போதுமே. அவ்வாறன்றி மண்டைவீங்கிக் கொண்டல்கள் எனக் கூறுவதா? கருத்தைக் கருத்தால் எதிர்க்க வேண்டுமேயன்றி ஆளை நேரே தாக்குதல் பண்புடையார் செயலன்று.

பெரியார் தமிழைக் காட்டு மிராண்டி மொழியெனக் குறிப்பிட்டவர் எனவும் Nuisance எனக் கூறினாரெனவுங் குறிப்பிட்டுள்ளீர்கள். இவற்றை மட்டும் பெரியார் கூறவில்லை; தமிழர்களைக் காட்டு மிராண்டிகளெனவுங் கூறினார். பெரியாருடைய சொற்களை ஆய்கின்றபோது, அவை ஒரு பகுத்தறிவாளன் சொற்கள் என்ற எண்ணத்துடனேதான் அணுக வேண்டும். இத்தனை யாண்டுக்

காலமாக, எத்துணையெடுத்துச் சொல்லியும் இவர்கள் பன்னூறாண்டு கட்கு முன்னிருந்ததுபோலவே சிந்தையின்றியே இருக்கின்றனரே; 50, 60 அடி உயரமுள்ள ஒரு பெரிய தேரில், ஒரு சிறிய பொம்மையை வைத்து நூற்றுக்கான மாந்தர் அத்தேரை இழுத்துச் செல்லும் அளவிற்கு அறிவின்றி வாழ்கின்றனரே யென்பதால் அவ்வாறு திட்டி மொழிந்திருப்பர். தெ.பொ.மீ, அ.ச.ஞா., கொ. சு. மகாதேவன் ஆகியோரை எண்ணுகின்றபோது தங்கட்கு எத்துணைச் சீற்றம் பொங்குகிறது. தமிழ் படித்துப் பேராசிரியர்களாக இருந்தவர்களே இப்படியுள்ளனரே என்று வெகுளி தோன்றுகிறது. ஆனால் உண்மை யிலேயே அம் மூவரும் ஆரிய அடிமைகளோ, தமிழ்மானங் குறைந் தவர்களோ, மண்டை வீங்கிகளோ அல்லர். தாங்கள் கூறுவதாலேயே அவர்கள் அத்தகையோராக ஆகிவிட மாட்டார்கள். அதைப் போலவேதான் பெரியாரும். தாம் கூறும் பகுத்தறிவுக் கொள்கைகளை யேற்கமாட்டோம் என்கிறார்களே என்பதால் காட்டு மிராண்டிகள் எனச் சாடினார். **அவர் சொன்னதாலேயே தமிழ் காட்டு மிராண்டி மொழியாக ஆகிவிடாது. ஏதோ தமிழனுக்கு அப்படியாவது அறிவு வராதா என்று திட்டியிருப்பார் என்றுதான் அன்றும் பலர் நினைத்தார்கள்.**

இனிப் பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தங் குறித்துத் தங்கள் கருத்தினைப் பற்றியும் சில கருத்துகள்.

ஞு, ரு, ஞு என்பன மூன்று எழுத்துகள். இவற்றை ணா, றா, னா, என எழுதின் ஆறெழுத்துகளாகின்றன. இதனால் நேரமும் இடமும் மிகுதியாகின்றன. அதேபோல் ணை, லை, ளை, னை என்பன வற்றை, ணை, லை, ளை, னை என எழுதின் இடமும், நேரமும் மிகுதியாகின்றன. இதைச் சிறு குழந்தைகளும் நன்கறியுமே எனத் தெரிவித்துள்ளீர்கள். பெரியாரின் திருத்தத்தை ஈண்டும் பகுத் தறிவுக் கண்கொண்டுதான் காணவேண்டுமேயன்றி இடத்தையும் நேரத்தையும் அவர் எண்ணிப் பார்க்கவில்லை. கா, ஙா, சா, ஞா, போன்ற 15 எழுத்துகள் கால் (ா) சேர்த்து எழுதப் பெறுகின்றபோது காலமும் இடமும் மிகுவது தெரியவில்லை. ஏனைய மூன்றெழுத்துகளை எழுதுவதில் மட்டும் நேரமும் இடமும் மிகுதியாவதாக எண்ணு கிறீர்கள்.

அதேபோல், கை, ஙை, சை, ஞை என்று 14 எழுத்துகளை எழுதுவதில் நேரமும் இடமும் மிகுதியாகின்றன என்பதைத் தாங்கள் எண்ணிப் பார்க்கவில்லை. ணை, லை, ளை, னை என்ற நான் கெழுத்துகட்கு மட்டும் இடமும் நேரமும் மிகுதியாவதாக நினைக் கின்றீர்கள். (இவை சிறு குழந்தைகட்கும் புரியுமே என்று கூறி யுள்ளது எத்துணைப் பொருந்துமோ தெரியவில்லை.) ஈண்டும், முதலில் கூறிய 15 எழுத்துகளையும் பிற்கூறிய 14 எழுத்துகளையும் ஒரு வகையாக எழுதி, மற்றை மூன்றையும், நான்கையும் வேறு வகையாக

எழுதுவது பகுத்தறிவுக்கு ஒவ்வு மாறில்லையே என்பதுதான் பெரியாரது கேள்வி. இங்கே தாங்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். எழுத்துகளைக் கற்கின்றபோது ணா, றா, னா, ணை, லை, ளை, னை என்றுதான் குழந்தைகள் எழுதுகின்றன என்பதை நீங்கள் அறியவேண்டும். நாம் திட்டித்திருத்தி ணே, லை......என்று எழுத வேண்டுமென்று பழக்குவதாலேயே இப்போதுள்ள எழுத்துகளைப் போல் எழுதுகின்றன.

மற்றென்று, ணெ, ணே, றெ, றே, போன்றவற்றை, ணொ, ணோ, றொ, றோ என எழுதின் மூன்றெழுத்துகள் ஆகின்றன என்பதால் நேரமும் இடமும் பெருகுகின்றன என்பதும் தங்கள் கூற்று. கொ, கோ, சொ, சோ போன்ற 15 எழுத்துகளும் மூன்று எழுத்துககளாக எழுதப்பெறுகிறபோது, மூன்று எழுத்துகளுக்கு மட்டும், நேரமும், இடமும் மிகுகின்றன என்று கூறுவது அறிவுக்குப் பொருந்துமாறில்லை. அனைத்திற்கும் மேலாக, பெரியாரது சீர் திருத்தம், இப்போது தட்டச்சுக்குப் பெரிதும் பலனளிக்கின்றது.

எனவே, தங்களுடைய மறுப்புக்கூற்று, யாரோ ஒரு சிலரை உள்ளத்திற்கொண்டு, உண்மையை, அறிவுக்குப் பொருத்தமானவற்றை எண்ணிப்பாராது, கூறப்பெற்ற மறுப்பாகவே தோன்றுகின்றது.

இறுதியாக ஐ, ஒள என்னும் எழுத்துகளைப் பற்றியும் ஒரு கருத்து. **ஐ, ஒள என்பனவற்றை அய், அவ், என எழுதுதல் கூடாது. அவ்வாறு எழுதவேண்டுமென்பாரும் மொழி முதலிலேயே மேற்கொள்கின்றனரேயன்றி, இடை, கடை நிலைகளில் பயனுறுத்துவதில்லை. அங்ஙனம் பயன்படுத்தின் சொற்கள் எங்ஙனம் அமையுமென்பதையெல்லாஞ் சுட்டிக்காட்டி, ஒரு மலரில் கட்டுரையில் எழுதியுள்ளேன்.**

இதையொட்டித் தாங்கள் ஒரு நிலையில் குழப்பியுள்ளீர்கள் என்பதாகத் தெரிகிறது. கை, வை என்பனவற்றைக் கய், வய் என்று எழுதவேண்டுமேயெனக் குறிப்பிட்டுவிட்டுப், பொய், மெய், செய் என்பனவற்றைப் பொஅய், மெஅய், செஅய் என எழுதினால், அவற்றைப் பொய், மெய், செய் எனப் படிக்க முடியுமோ என வினவியுள்ளீர்கள். ஐ என்பதை அய் எனத்தான் எழுதவேண்டி வருமேயல்லாது பொய் என்பதைப் பொஅய் என யாரும் எழுத மாட்டார்களே. பொய் என்பதில் யகர ஒற்றின் ஒலி மட்டும் உள்ளதேயன்றி ஐகார ஒலியென்பது இல்லையே. பொய் என்பதைப் பொஅய் என்று எழுதவேண்டுமென்று எங்ஙனந் தங்கள் சிந்தையில் தோன்றியதோ தெரியவில்லை. வணக்கம்.

—**வீ. இராசமாணிக்கம்.** தமிழ்ப் பேராசிரியர்,
பூசாகோ கலை அறிவியல் கல்லூரி கோவை-**641 014.**

இம் மறவனோடு எம்முடை நட்பு.

—அழகுமுதல்வன்.

('தென்மொழி' பண்டைப்பாசிரியரைத் தன் காதல் தலைவனாகக் கொண்டு எழுதப்பெற்ற ஒரு மடல் இது.)

என் உயிர்த்தலைவனே!
உன்னுடைய காதலி இவளென்று எனைச் சுட்டிச் சிலர் பகடி செய்கிறார்கள்.
நெருங்கி வளர்ந்த உன் சோலைக்குள்ளே என் கூடுகளைக் கட்டிக் கொண்டேன்.
என் விடாய் தணிக்கவே ஊறிய உன் நீர்ச் சுனையைக் காணுமல் எங்கே இறந்துபடுவேனோ என்று நான் வருந்தியதுண்டு. அவ்வளவு நாட்களை உன்னிடம் நெருங்காமல் வெறு வானிலும் பாலை நிலத்திலுமே கழித்து விட்டேனே என்று கண்ணீர்விட்டழுதேன்.
வாழ்க்கைத் தாமரை இலையில் என் உயிர் முத்துகள் விரைந்தோடும் போது, என் மறவனே! உன் நெஞ்சழகு ஒன்றே என்னைக் கவர்ந்து கொண்டது!
நீயோ பாடல்கள் கூறினாய்! என் கண்களோ கடல்களாயின! நம் நட்புக்குக் கையுறையாக எத்தனையோ மலர்களையும் ஓலைகளையும் சுவடிகளையும் அளித்திருக்கிறாய்.
காலம் அழியும், அவை அழியா என்பதை நானறிவேன். அந்தக் கழுதைகள் எங்கே அறியப் போகின்றன.
உன்னை மீண்டும் பல்கலை விழாவிலே கண்டேன். உன் கையிலே முரசிருந்தது; என் காதுகள் தவங்கிடந்தன!
வானவில்லே நிலையானது என்று நான் வானம்பாடியபோது நீ கிழக்கு வானிலே புன்னகை செய்து கொண்டிருந்தாய்.
உன் நெஞ்சக் கல்லூரியில் திங்கள் விடுமுறை நேர எங்கள் ஊருக்கு என்று வருவாய், என்று வருவாய் என்ற ஏக்கமல்லவா என் உயிரைச் சுமந்திருக்கும். ஒவ்வொருமுறையும் உன்னை நோக்கும் போது நீ கடைக்கண்ணால் ஒவ்வொரு புதுப்பாவியம் சொல்வாயே அதற்குத்தான், அதற்காகவேதான் என் உயிர் வாழ்ந்து கிடக்கிறது.
வள்ளுவன் வரைந்தான்;
"நீர் இன்றி அமையாது உலகு"—என்று.
என் உயிர்த்தலைவனே! நானும் உனைப்பார்த்து அறிவிக்கிறேன்;
"நீர் இன்றி அமையாது உலகு".
தென்மொழி மறவனே!
இந்த உலகமே உன் உதட்டசைவை எதிர்நோக்க வேண்டிய நிலைமை கனிந்துவிட்ட இந்த நேரத்தில், அதுவும் உன் காதலி என்று கூறிக் கொள்ள நான் ஏன் தயங்கவேண்டும்?
பகடிசெய்வோர் உயிர்த்தன்மை பட்டழிந்து போம் வரையும்
மறவனோடு நான்கொண்ட மாத்தமிழின் நட்புரைப்பேன்!
சிறகிருப்பின் உலகமெலாம் இச்சீர்மை அறிவிப்பேன்!
பறைகள் முழக்கிடுவேன்! பாயிரங்கள் பாடிநிற்பேன்! o

நன்றியும் வேண்டுகோளும்.

'தென்மொழி' நெடும்பணிக்கெனச் சென்னைக்கண் குடிபெயர்ந்து வந்த எங்களை, அன்புரையும் அறிவுரையும், அறவுரையும், வினையுரையும் கூறி வாழ்த்தி வழியனுப்பியும், பின், மறவாமல் பொங்கல் புத்தாண்டில் வாழ்த்துரை விடுத்தும் ஊக்கந் தந்த அன்பர்களுக்கும், பெரியோர்களுக்கும், அரும்பெறல் நண்பர்களுக்கும் எங்கள் நெஞ்சம் நிறைந்த பெருநன்றிப் பாட்டினை உரித்தாக்கிக் கொள்கின்றோம். இனி, நம் தென்குமரித் தமிழினத்தார், "முன் புதைவுண்ட தம் முத்தமிழ்ச் சிறப்பினை, மண்பதைக் குணர்த்தி," மீண்டு நிலை கொள்ளும் காலம் மலரும் வரைக்கும், இப் பொங்கல் திருநாளை, இழந்த உரிமைகளை மீட்கத் தொடங்கும் போர் நாளாகவே மேற்கொண்டு, குடும்பங் குடும்பமாகக் கடைப்பிடித்து வரல்வேண்டும் என்றும் வேண்டிக் கொள்கின்றோம்.

"ப.ஃறுளி முன்றில்" 23, கோயில் குறுஞ்சாலை, திருநகர் குடியிருப்பு, சைதை-சென்னை-600 015.	இன்ன வண்ணம், **தென்மொழி** **மறை. நித்திலின்பன்** **குடும்பத்தினர்.**

தென்மொழித் தாளிகையின் வெளியீட்டு அறிக்கை.

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1956,)
19 ஈ ஆ (வகுப்பு 8-ஆம் கட்டளைப்படி.)

1. வெளியிடும் இடம் : **சென்னை-5**
2. கால முறை : **திங்கள் ஒருமுறை.**
3. அச்சிடுவோர் பெயர் : **திருவாட்டி, மா. தாமரை.**
   இனம் : **தமிழர்.**
   முகவரி : **தென்மொழி அச்சகம், சென்னை-5.**
4. வெளியிடுவோர் பெயர் : **திரு. பெருஞ்சித்திரனார்,**
   இனம் : **தமிழர்.**
   முகவரி : **தென்மொழி அச்சகம், சென்னை-5.**
5. ஆசிரியர் பெயர், முகவரி : **திரு. பெருஞ்சித்திரனார், சென்னை-5.**
6. ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவரிகளும். : **திரு. பெருஞ்சித்திரனார், சென்னை-5.**

பெருஞ்சித்திரனாராகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று உறுதி கூறுகின்றேன்.

15—2—1979,
சென்னை-5.

—**பெருஞ்சித்திரன்.**
(ஒப்பம்.)

என்று வரும் உணர்வு?

சிங்கை. மா. கதிரொளி.

எத்துணைதான் எழுதுவதோ? இயம்புவதோ?
உணர்வுவர இடித்துக் காட்டி
எத்துணைதான் பேசுவதோ? ஏசுவதோ?
எந்தமிழர் நெஞ்சில் இன்னும்
புத்துணர்வே வாராது இருந்திடவே
கண்டுமனம் பொறுக்க வில்லை!
இத்துணைதான் மழுங்கல்நிலை இருப்பதுவா
பொறுப்பதுவா இனியும் இங்கே?

கொட்டிடவே குனிகின்றான்; குறியின்றிக்
குடல்நிரப்பி வாழு கின்றான்!
கெட்டதடா குமுகாயம் எனுமுணர்வே
சிறிதேனும் கருதி டாமல்
திட்டுவதுங் கேளாத செவிடாகிக்
கருத்தின்றி இருக்கின் றானே!
எட்டுவதே இலையென்றும் வாழ்வினிலே
"ஏற்ற"மென இயம்ப லாமோ?

செங்குருதி சிந்தி,உடல் செந்தீயில்
மூழ்க,உயிர் மடித்துக் கொண்டே
"எங்களுயிர் தமிழுக்கு, எங்களுடல்
மண்ணுக்கே" என்று கூறிப்
பொங்கியசெந் தமிழுணர்வால் போனோரின்
நினைவெல்லாம் கனவாய்ப் போமோ?
எங்கேதான் போகின்றான் இத்தமிழன்
இனிஎன்று திருந்து வானோ?

பொங்கிவருந் தமிழுணர்வு மீதூர்ந்து
பொலிய,உயிர் தமிழுக் கென்றே
சங்கொலிபோல் முழங்கிடவே வேண்டாவா,
சலிப்புற்றுக் கிடத்தல் ஏனோ?
நங்கூரம் செலுத்தியதே போல்நெஞ்சில்
உணர்வற்றே இருத்தல் நன்றோ?
கங்குலெனும் அடிமைநிலை என்றுமடிந்
துணர்வுவரும் தமிழ னுக்கே?

தமிழ்ப் பண்பாட்டின் தனிச்சிறப்புகள்: பழந்தமிழகத்தில் சாதியிருந்ததில்லை.

பன்மொழிப்புலவர்: **இரா. மதிவாணன். க மு.**

வேற்றுமை தெரிந்த நாற்பால்:

தொல்காப்பியத்தில் மக்களனைவரும் உயர்திணையாகக் கூறப்பட்டுள்ளனரேயன்றி நாற்பாலாகக் கூறப்படவில்லை. ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனின் புறநானூற்றுப் பாடலில் வரும் 'வேற்றுமை தெரிந்த நாற்பால்' என்னுந்தொடர் தமிழரிடை நால் வருண வேறுபாடு இருந்தது என்று பொருள் கொள்ளத் தக்கதன்று. ஆரியரின் நால்வருணம் நிறவேறு பாட்டில் தோன்றிப் பிறப்பு வேறு பாட்டில் நிலை கொண்டது. தமிழரிடை நான்கு நிற உடலமைப்புகள் இருந்ததில்லை. பிறப்பு கருதிய வேறுபாடிருந்திருப்பின் அரசனுக்குப் பிறந்தவன் குன்றக்குறவர் மகளை வேட்டுப் போருக் கெழுந்த மகட்பாற் காஞ்சித்துறை பண்டு தொட்டு தமிழர் வாழ்வியல் கூறாகத் தோன்றியிருக்க முடியாது. வள்ளுவர் போன்றோர் அரசர்க்குள்படு கருமத் தலைவராகவும் பன்மாண் கல்வி நுன்மாண் நுழைபுலச் செல்வராகிக் கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையேற்றிருக்க முடியாது. ஆரியர் அலறத் தாக்கிய நெடுஞ்செழியன் ஆரியரின் குலப்பிரிவுகளை ஏற்றுக் கொண்டான் என்பதை நம்பவியலாது.

ஆரியரின் நால்வருண பாகுபாடு தமிழகத்தில் இருந்திருந்தால் நாலாம் வருணத்தவர் கல்வி கற்கத் தகுதியற்றவராயிருப்பர். வெண்ணிக்குயத்தி, குறமகள் இளவெயினி போன்றோர் சூத்திரப் பிரிவில் அடங்குதலான், நெடுஞ்செழியன் நாலாம் வருணத்தவரைக் கல்வி கற்கத் தூண்டுவது ஆரியரின் நால்வருணக் கோட்பாட்டுக்கு எதிரான நடவடிக்கையாகும். ஆரியக் கோட்பாடுகள் தமிழகத்தில் மென்மெலப் புகுத்தப்பட்டு வருவதைத் தடுக்கவும், தமிழ் மக்களுக்கு எச்சரிக்கை தரவும் ஆரியர்க்கு அறைகூவல் விடுக்கவும் மன்னன் இப்பாடலைப் பாடியிருக்க வேண்டும். ஆரியப் பார்ப்பனரின் பேச்சை நம்பி, உடலுழைப்புத் தொழில்களில் ஈடுபட்டுள்ள பெரும்பான்மை யரன தமிழர்க்குக் கல்விக் கண் பறிக்கும் முயற்சிகள், வருங்காலத்தில் மேற்கொள்ளப்பட்டு விடுமோ என்னும் அச்சத்தில் முகிழ்த்த பாடல் இது. வடநாட்டில், கல்வி ஒரு சிலரின் உடமையாகிவிட்ட நிலைமை தென்னாட்டில் புகுந்துவிடலாகாது என்று மன்னன் கருதினான் என்பதை இது நமக்குத் தெற்றெனப் புலப்படுத்துகிறது. எனவே, வேற்றுமை தெரிந்த நாற்பால் வடபுலத்தாருடையதே யன்றி தென்னாட்டாரது அன்று. இப்பாடல் வாயிலாக, 'ஆரியர்களே! நீங்கள் கூறும் நாற்பால் நெறிப்படி கீழ்ப்பாலவரும் எங்கள் நாட்டில் கல்வி கற்கமுடியும்; மேற்பாலவராக முடியும். ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகளில் சிறந்தவனைத் தாயும் விரும்புமாறு போல,

எக்குடிப் பிறந்தவனுயினும் கல்வியிலும் ஒழுக்கத்திலும் ஆற்றலிலும் வல்லவனை நாடே விரும்பித் தலைவனுக ஏற்றுக் கொள்ளும். இஃது எங்கள் நாட்டுப் பண்பாடு' என அறைகூவல் விடுத்திருக்கிருன் பாண்டியன்.

அரசரும் அந்தணரும் தவிர்ந்த தமிழர் அனைவரையும் 'இருவகை மரபின் ஏனோர் பக்கம்' எனத் தொல்காப்பியர் பொதுப்படக் கூறியிருப்பதும், வாகை, பாடாண், திணைகள் அனைவர்க்கும் பொதுவாயிருத்தலானும் தமிழரிடை பிறப்பு கருதிய குல வேறுபாடுகள் என்றும் இருந்ததில்லை என அறியலாம். கடைக்கழக காலத்தையொட்டி வடவாரியப் பார்ப்பனர் தமிழகத்தில் புகுந்ததும் நிலைமை சிறிது சிறிதாக மாறத் தொடங்கியது. ஆரியக் குருமார் மாணுக்கரிடம் மிகுந்த பொருளை எதிர்பார்த்தனர். தமிழக்குருமாரும் சமண பவுத்த குரவர்களும் தம் மாணுக்கர்க்கு இலவயமாகக் கல்வி புகட்டினர். சமண பவுத்த சமயங்கள் தளர்ந்து ஆரியக் கோட்பாடுகள் வலுப்பெற்று வருவதறிந்த பாண்டியன், ஆரியக் குருமார்க்கு மிகுந்த பொருள் தரவியலாத நிலையில், வருங்காலத்தில் தமிழர் கல்லாத கூட்டமாகி விட்டால் என்ன செய்வது என்றேங்கியே, உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் கல்வி கற்றுக் கொள்ளுங்கள் என ஊக்கியிருக்கிருன். வேத வேள்விகள் பெருகியதால் வடமொழியின் சிறப்பு மேலோங்கி வந்ததும் நக்கீரர் முன்னிலையிலேயே 'ஆரியம் நன்று தமிழ் தீது' என்றொருவன் கூறத்துணிந்ததும், தமிழின் இடத்தைப் பிடித்துக் கொள்ள சமற்கிருதம் முயன்றதைக் காட்டுகிறது.

இளங்கோ, விச்சிக்கோ, செல்வக்கடுங்கோ என அரசர் பெயர்களுக்கு உயர்வு அடை மொழியாக வந்த 'கோ' என்னுஞ்சொல்' 'கலஞ்செய்கோ' எனக்குயவர்க்கும் அடை மொழியாக வருதலான் தொழில் கருதி ஒரு குடியினரைத் தாழ்த்தியுரைக்கும் வழக்கம் தமிழகத்தில் இருந்ததில்லை என அறியலாம்.

'வைசிகன் பெறுமே வணிக வாழ்க்கை' என்றூற் போன்ற நூற்பாக்கள் தொல்காப்பியத்தில் வலியப் புகுத்தப்பட்ட இடைச்செருகல்கள் ஆகும். மரபியலில் அஃறிணை உயிர்களைப் பற்றிய நூற்பாக்களிடையில் இவை புகுத்தப்பட்டுள்ளன. வைசிகன் என்னும் வடசொல்லைத் தொல்காப்பியர் ஆண்டிருந்தால் சூத்திரன் என்னுஞ் சொல்லையும் ஆண்டிருக்க வேண்டுமன்றே? இஃதொன்றே இவ்விடைச் செருகல்களைக் காட்டிக் கொடுத்து விடுகின்றன.

ஆரியக் கோட்பாட்டின்படி தமிழகத்தில் நிறுவப்பட்ட நால் வருண பூதங்களின் கைகளில் வருணத்திற்கேற்ற கருவிகள் தரப் பட்டுள்ளன. பார்ப்பன பூதத்தின் கையில் நூலும், அரச பூதத்தின் கையில் படைக்கலமும், வணிக பூதத்தின் கையில் துலாக்கோலும்,

சூத்திர பூதத்தின் கையில் இசைக் கருவிகளும் தரப்பட்டுள்ளன. ஆரியரின் நால்வருணக் கோட்பாட்டின்படி நாலாம் வருணப் பூதத்தின் கையில் அடிமைத் தொழில் செய்தற்குரிய கருவிகளன்றோ தரப்பட்டிருக்க வேண்டும். பாணர் கூத்தர் போன்ற முத்தமிழ் வித்தகர்களை இழிவுபடுத்தி நாலாம் வருணத்தில் சேர்க்கவே இவ்வாறு செய்துள்ளனர். இது தமிழையே இழிவுபடுத்தும் முயற்சியாகும். பொற்பூவும் தேனும் மாவும் அளித்துத் தமிழ் வேந்தர்களால் பாராட்டப்பட்ட பாணரும் கூத்தரும் ஆரியரின் கொல் குறும்பால் தாழ்த்தப்பட்டவராகித் தீண்டப்படாத வருமாயினர்.

ஒரு குடியில் பிறந்ததால் மட்டும் ஒருவன் தன்னை உயர்வாக நினைத்துக் கொள்ளத் தமிழ்ப் பண்பாடு இடந்தந்ததில்லை. ஒருவர் குறையை மற்றவர் பொறுத்துக் கொள்ளும் காதல் வாழ்க்கையில் கூட இது பொறுத்துக் கொள்ளப் படவில்லை. அகத்துறையில், தான் பிறந்த, குடியைப் பெரிதாகக் கருதும் ‘குடிமையின்புறலை’ அக வாழ்வுக்கு ஆகாத குற்றங்களுள் ஒன்ருகத் தொல்காப்பியர் குறிப்பிடுகிருர். அக வாழ்வுக்கே பொருந்தாதெனின் புற வாழ்க் கையில் பிறப்பான்வரும் உயர்வு பொருந்துமோ? எண்ணிப் பார்க்க.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், ஆரியக் கோட்பாடான நால்வருணம் என்பதைத் தமிழ்ப் படுத்திச் சொல்ல ‘நாற்பால்’ என்னும் புதுத்தமிழ்ச் சொல்லைப் படைத்திட்டுக் கொண்டான். ஒரு மொழியில் புதிதாகப் புகுந்த சொல்லாட்சி பழைய மரபைக் காட்டாது.

பார்ப்பார் யார்?

பார்ப்பார், பார்ப்பனர் என்னுஞ் சொற்கள் ஆரியப் பார்ப்பன ரையே குறிப்பதாக அனைவரும் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆரியப் பார்ப்பனர் எவரும் தம்மை ‘பார்ப்பனர்’ என்னுஞ் சொல்லால் அழைத்துக் கொள்வதில்லை. பிராமணர் என்றே அழைத்துக் கொள் கின்றனர். பிராமணர் தம்மைப் பார்ப்பனர் என்று (சாதிப்பெயர்) சொல்லிக் கொள்ளாதது ஏன் என்று ஆராய்ச்சியாளர் எவரும் சிந்திப்பதில்லை. கபிலர் தன்னை அந்தணன் புலவன் என்று குறித்துக் கொண்டார். பார்ப்பான் கவுணியன் விண்ணந்தாயன் துளுவப் பார்ப்பனன். இன்றைய துளுவப் பார்ப்பனர் பெயர்களில் பார்ப்பான் என்னும் முன் அடை மொழி யில்லை. கவுணியன் விண்ணந்தாயனைப் பிற்காலத்தார் குலப்பெயரொடு சார்த்தி ‘பார்ப்பான் கவுணியன் விண்ணந்தாயன் என்றழைத்திருக்க வேண்டும். அல்லது அப்புலவர் கோவில் மேலாண்மையதிகாரி எனப்பொருள் பட்ட ‘பார்ப்பான்’ பட்டப் பெயருடையவராய் இருந்திருத்தல் வேண்டும். எனவே, ஆரியர் தமிழகம் புகுந்த காலத்தில் அவர்களுக்கு ‘பார்ப்பார்’ என்னும் பெயரிருந்ததில்லை. பார்ப்பார் என்பது தூய தமிழ்ப்பெயர்.

இது தமிழப் பார்ப்பாராகிய தமிழரையே குறித்தது. இவர்கள் வழிபாட்டுரிமையும் கோயில் மேலாண்மையும் கொண்டிருந்தனர். அதற்கான சான்றுகள் பின்வருமாறு.

1. பிராமணரை வடநாட்டார் மட்டும் பிராமணர் என்றழைக்கின்றனர். தென்னாட்டு மொழிகளில் பார்ப்பான் என்னும் தமிழப் பூசகர்களின் பெயரே ஆரியப் பிராமணர்களுக்கும் உரிய சாதிப் பெயராகவுள்ளது.

2. பிராமணன் என்னுஞ்சொல் பிரம்மத்தை வழிபடுவோன், பிரம்மாவின் முகத்தில் தோன்றியவன் என்று பொருள்படும் ஆரியச் சொல் மூலத்தில் தோன்றியது. கிரேக்க இலத்தின் மொழிகளிலும் இச்சொல் உள்ளது. பார்ப்பான் என்னுஞ் சொல்லுக்கு மேற்குறித்த பொருள் இல்லை. பார்ப்பான் என்னுந் தமிழ்ச் சொல்லுக்கு, நூலைப் படிப்பவன், வழிபாடு செய்பவன், கோவில் மேலாண்மை செய்பவன் என்னும் பொருள்களே உள்ளன. ஆரிய வேதங்கள் எழுதப் படாதவை. அவை படிக்கப்படுமாறு யாங்ஙனம்? எனவே பார்ப்பான் என்னுஞ் சொல் வேதம் படிப்பவன் என்னும் பொருளுடையதன்று. எழுதப் படுகின்ற தமிழ் நூல்களைப் படிப்பவனே தமிழில் பார்ப்பான் எனப் பட்டான்.

கன்னடம் தெலுங்கு ஆகிய மொழிகளில் பார்ப்பனத் தொழில் தொடர்பான பழமொழிகள் பலவுள்ளன. அம்மொழிகளில் பார்ப்பத்தியம், பாருபத்தியம் என்னுஞ் சொற்கள் கோவில் மேலாண்மை செய்தலைக் குறிக்கின்றன. கன்னடத்தில் பார்வண என்னுஞ்சொல் முன்னோராகிய தென்புலத்தார்க்குரிய கடனிறுக்கும் சடங்கைக் குறிக்கிறது. மலையாள மொழியில் பார்ப்பான் என்னுஞ்சொல் முனிவனைக் குறிக்கிறது. தமிழ முனிவரும் பூசகரும் அந்தணர், பார்ப்பார் எனப்பட்டனர் என்பது வெளிப்படை. ஆங்கில நாட்டுக்குச் செல்லும் தச்சன் **Carpenter** என்று அழைக்கப் படுவானேயல்லாமல் தச்சன் என்று அம்மொழியினரால் அழைக்கப்பட மாட்டான். அது போன்றே, கோவில் வழிபாடும் துறவும் தொழிலாகக் கொண்டு தென்னகம் வந்த ஆரியப் பிராமணரும் பொது மக்களால் பார்ப்பனர் என்றும் அந்தணர் என்றும் அழைக்கப்பட்டனர். அது ஒன்றே பற்றுக் கோடாக அவர் தமிழப் பார்ப்பார் ஆகார்.

3. நாளடைவில் தென்னாடு புகுந்த ஆரியப் பார்ப்பனர் அரசரிடையில் சீருஞ்சிறப்பும் பெற்று மேலோங்கியதால், தமிழப்பார்ப்பார் தம் பண்டைய பெருமைகளை இழந்து சிறுமையுறுவாராயினர். ஆரியப் பார்ப்பனரினும் தமிழப் பார்ப்பார் தாழ்வாக மதிக்கப்படலாயினர் என்பதற்கு மலையாளத்திலும் சில சான்றுகள் கிடைக்கின்றன. அங்கு ‘பாப்பினி’ என்றொரு தமிழப் பார்ப்பன சாதியினர் உள்ளனர். இவர் ஆரியப் பிராமணரினும் தாழ்ந்த பிராமணராகக்

கருதப் படுகின்றனர். மலையாள அகரமுதலி இவர்களைப் பின்வருமாறு குறிப்பிடுகிறது. பாப்பினி. **a caste of lower Brahmins who purify Nayars while their women sing at Nayar marirages.** திருமணங்களில் மகளிர் பாடுவது தமிழ்ப் பண்பாட்டின் கூறு என்பது அகநானூற்றுலும் புலப்படுகிறது. ஆரியப் பிராமணரின் மகளிர் பிறரில்லங்களில் பாடித் திருமணச் சடங்குகளைச் செய்வது யாண்டும் இல்லை. இதனுல் இந்தப் பாப்பினி வகுப்பார் தமிழப் பார்ப்பாரே என்பதில் ஐயமில்லை. தமிழகத்திலும் பண்டாரம், குருக்கள் என்போர் பண்டைய தமிழப் பார்ப்பாரின் வழியினரே என்று மொழிஞாயிறு பாவாணர் கூறுகிருர்.

4. மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்

என்னும் குறளைப் படிப்பவர்கள் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று கூறிய திருவள்ளுவரா பார்ப்பான் பிறப்பைச் சிறப்பித்துக் கூறுகிருர் என்று வியந்து வினவக்கூடும். வள்ளுவர் கூறும் பார்ப்பான் தமிழப் பார்ப்பான் என்றறிதல் வேண்டும். சிறந்திருப்பது சிறப்பு என்ருற்போல பிறங்கியிருப்பது (மேம்பாடு) பிறப்பு எனப் பட்டது. இதன் பொருள் தாயின் வயிற்றில் பிறப்பதன்று. பார்ப் பான் பிறப்பு = பார்ப்பானின் மேம்பாடு எனப்பொருள் கொள்ள வேண்டும். பிறப்பே குடிமை ஆண்மை...எனத்தொடங்கும் தொல் காப்பிய நூற்பாவிலும் பிறப்பு இப்பொருள்படுதல் காண்க. உரை யாசிரியர் பலரும் இதனைப் பிறழக் கொண்டு பிறப்பு—குடிப்பிறத்தல் எனவும் குடிமை—குடியின்கண் உளதாந்தன்மை எனவும் பொருள் கூறி இடர்ப்பட்டுள்ளனர். மேற்கண்ட குறளில் பிறப்பு என்பதற்கு மேம்பாடு எனப்பொருள் கொள்ளாக்கால் பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் என்னுங்குறளொடு இது மாறு கொளலாகும் என்பதறிக. ஒரு சொல் பல பொருள் தந்து நிற்றல் இயல்பு. சிறப்பின்பாலால் தாயும் மனத்திரியும் என்னும் பாடல் வரியில் 'சிறப்பு' பண்பாகு பெயராய் சிறப்புடைய மகனைக் குறித்தமை காண்க.

இவ்வாறு பொருள் கொள்ளுதற்கு மற்றெரு வலிய கரணியமும் உள்ளது. ஆரியப் பிராமணர்கள் ஒழுக்கம் குன்றினுலும் அவர் களுக்குப் பிறப்பால் வந்த பெருமை சிறிதும் குன்ருது. எத்தகைய தீவினையும் இழி தொழிலும் செய்தாலும் அனைத்துத் தண்டனைகளி லிருந்தும் மனுநூல் பிராமணர்களுக்கு விலக்களித்து விடுகிறது. ஆரியப் பிராமணன் ஒழுக்கம் கெட்டால் அவனுக்கு எள்ளத்தனையும் இழிவில்லை. 'பார்ப்பான் பிறப்பொழுக்கம் குன்றக்கெடும்' என்னும் குறட்பா ஆரியப் பிராமணர்களுக்குப் பொருந்தவே பொருந்தாது. இஃதொன்றே இக்குறட்பா தமிழப் பார்ப்பானைக் குறித்துப் பாடியது என்பதைத் தெளிவாக்கும். தமிழப் பார்ப்பானின் மேம்பாடு ஒழுக்கம் குன்றினுல் கெடும் என்பது இதன் பொருள். தமிழப் பார்ப்பனர்

ஆரியப் பார்ப்பனரினும் வேறுபட்ட நல்லியல்பினரால் வாழ்ந்து வந்தனர் என்பதற்கு இக்குறட்பாவும் சான்று பகர்கிறது. பார்ப்பார்க் கல்லது பணிபறியலையே என்னும் பதிற்றுப்பத்து வரியும் தமிழப் பார்ப்பாரையே குறித்தது என்பதில் ஐயமில்லை. தமிழப் பார்ப்பார் கொல்லா நோன்பினராதலின் செந்தண்மை பூண்ட அந்தணர் எனப் பட்டனர். அறக்களத்து அந்தணர் என்பது தமிழப் பார்ப்பார்க்குரிய சிறப்புப் பெயர். வேள்வியில் கொலை செய்யும் ஆரியப் பார்ப்பனர் மறக்களத்து அந்தணர் எனப்பட்டனர்.

5. ஆரியர் வருகைக்கு முன்பு கடல் கொண்ட குமரி நாட்டில் தமிழர்க்கு சமயக் குரவராயும், மக்களால் பெரிதும் மதிக்கத்தக்க முனிவராயும், கோவில் தலைமையதிகாரிகளாகவும் இருந்தவர்களைப் பற்றிய குறிப்புகள், சுமேரியா போன்ற தொல் பழங்கால நாகரிக நகர எழுத்துச் சான்றுகளிலிருந்து கிடைப்பதாக **'The Riddles of three oceans'** என்னும் நூலில் கோந்தரகோவ் என்னும் உருசிய நாட்டு வரலாற்றுசிரியர் குறிப்பிடுகிறுர்.

6. தமிழப் பார்ப்பார் அனைத்துயிர் மாட்டும் செந்தண்மை பூண்டதால் ஆனியல் பார்ப்பனர் எனப்பட்டனர். பிற்காலத்தில் இப்பெருமை ஆவினையே கொன்று வேள்வியிலிட்டுப் பொசுக்கும் ஆரியப் பார்ப்பனர்க்கும் சார்வதாயிற்று. ஆரியப் பார்ப்பனர் தமிழப் பார்ப்பாரினும் பெரிதாகத் தமிழ் மன்னர்களால் என்று மதிக்கப் பட்டார்களோ அன்றே தமிழப் பார்ப்பாரின் பெருமைகள் மண்ணில் மறையலாயின. பார்ப்பார், அந்தணர், ஐயர், நான்மறையாளர் என்பன பழங்காலத்தில் தமிழப் பார்ப்பாரை மட்டும் குறிப்பனவா யிருந்து, பிற்காலத்தில் தமிழப் பார்ப்பார் கோவில் தலைமையிழந்து வயிற்றுப் பிழைப்புக்காக வேறு தொழில் செய்து வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டபோது இச்சொற்கள் ஆரியப் பார்ப்பனர்க்கு மட்டும் உரியனவாயின.

ஆரியப் பார்ப்பனரின் வருகைக்குப்பின் தமிழகத்தில் நால் வகைப்பட்ட பார்ப்பனர் இருந்திருக்கின்றனர். முதல் வகையினர் தமிழப் பார்ப்பனர். இரண்டாம் வகையினர் ஆரியப் பார்ப்பனர். மூன்றும் வகையினர் கலப்பினப் பார்ப்பனர். நான்காம் வகையினர் ஆரியப் பார்ப்பனரால் பார்ப்பனராக மதமாற்றம் செய்யப்பட்டவர். ஆரியப் பார்ப்பனர் அனைத்துப் பார்ப்பனரினும் தலைமை பெற்றதால், சமண பவுத்த சமயங்களில் உள்ளதுபோல தாழ்த்தப்பட்ட மக்களில் எவரும் கல்வியும் தெளிவும் பெற்றிருந்தாலும் சமயத் தலைமையேற்க முடியவில்லை. பிற சாதியினர் சமயத்துறையில் மேம்பட்டாலும் ஆரியரால் மதிக்கப்படவில்லை. வள்ளலார் இன்றளவும் ஆரியப் பார்ப்பனரால் போற்றப்படாமை காண்க. இதுபற்றியே நந்தனர் கீர்த்தனையில்,

'பார்ப்பார தெய்வமது பலிக்காது பறையரைக்
காப்பாற்ற மாட்டாது கைவிடுமென்றூர்'

எனக்கூறியதும் என்க. ஆரியப் பார்ப்பனர் உள்நாட்டு மக்களுடன் உறவு கொண்டதால் பிறந்தவர் கலப்பினப் பார்ப்பனரான மூன்றும் வகையினர். இவர்களைக் குறித்து நச்சினூர்க்கினியர் பின்வருமாறு கூறுகிறூர்: 'பார்ப்பனர் ஏனை வருணத்துக் கொண்ட பெண்பால் கட்டோன்றின வருணத்தார்க்குச் சிகையும் பூணூலும் உளவேனும் அவர் இவற்றிற்கெல்லாம் (அறுதொழில்) உரியரன்றிச் சில தொழிற்கு உரியரெனக் கொள்க. இத்தகையார் திரவிடர்களுடன் கலந்து உடலுழைப்புத் தொழில்களையும் மேற்கொண்டனர். வடம வண்ணக்கன் சாத்தனூர் இத்தகையவர்.' தமிழப் பார்ப்பார் உச்சிக் குடுமி கொண்டவரல்லர் என்பது அறியத்தக்கது.

நான்காம் வகையினர் மதம் மாற்றப்பட்ட பார்ப்பனர். இராமாநுசர் பலரைப் பார்ப்பனராக்கினூர். சமயம் வளர்க்கச் செய்த வழிவகைகளுள் இதுவும் ஒன்று. மாத்துவர் கன்னட நாட்டில் மீனவர் பலர்க்கும் பூணூல் இடுவித்து பிராமணராக்கினூர். மீன் களுக்குப் பகரமாக கத்தரிக்காயை உண்ணுமாறு கூறினூர் என்பர். சில நம்பூதிரிகளின் திருமணத்தில் மீன் பிடிக்கும் சடங்கு உளதென்று கூறுகின்றனர். இவர்களும் ஆரியப் பார்ப்பனரினும் தாழ்வாகவே கருதப்பட்டனர். ஆரியப் பார்ப்பனரினும் தமிழப் பார்ப்பனர் கல்வி கேள்விகளில் மேம்பட்டிருந்தனர். தமிழர் ஆரியரினும் கல்வி வேள்வியில் சிறந்தவர்கள் என்பதை மெய்ப்பித்துக் காட்டச் செல்வக் கடுங்கோ வாழியாதன் தன் அமைச்சன் மையூர் கிழானை ஆரியப் புரோகிதனினும் கல்வி வேள்விகளில் சிறந்திருக்கச் செய்தான் என்றறிகிறூேம்.

இதுகாறும் கூறியவற்றூல் தமிழகத்தில் ஆரியர் வருகைக்கு முன் சாதி வேறுபாடு இல்லை என்பதும் நால்வருண ஏற்பாட்டைத் தமிழர்கள் ஏற்கவில்லையென்பதும், ஏற்காதவர்கள் ஐந்தாம் சாதியாக இழித்துரைக்கப் பட்டார்கள் என்பதும், தமிழப் பார்ப்பார் அனைத் துயிரிடத்தும் அன்பு பூண்ட அந்தணர் என்பதும் இவர்கள் மன்ன ராலும் வணங்கப்பட்டனர் என்பதும் தெளிவாகும்.

பிறப்பு அடிப்படையில் நால்வருணம் பிரித்து அதனுள் அடங் காத பஞ்சமர் எனும் ஐந்தாம் வருணத்தையும் பிரித்தது ஆரியப் பண்பாடு. தொழில் அடிப்படையில், அரசர் அந்தணர் வணிகர் வேளாளர் என நான்காகப் பிரித்தது சமணரின் பண்பாடு. பிறப் பாலோ தொழிலாலோ எவ்வகை வேறுபாடும் கருதாது பண்பால் மட்டும் ஒருவரின் உயர்வை மதிப்பிடுவது தமிழ்ப் பண்பாட்டின் தனிச்சிறப்பு என அறிக.

எதை எப்படி கற்பது?

உயிர்ப்பு: **சான் இரசுகீன்** (John Ruskin)

பெயர்ப்பு: **கா. வல்லவன்**

நூல் என்பது யாது? நூல் என்பது பேச்சொலியாக உள்ள ஒன்று அன்று. கருத்துகளைத் தொகுத்துத் தருவதோடு என்றும் நின்று நிலைத்த பயன் தர வேண்டும் என்னும் சீரிய நோக்கோடு எழுத்து வடிவில் அமைக்கப் பெற்றுள்ள ஒன்றுதான் நூலாகும். (**A book is essentially not a talked thing, but a written thing; and written, not with the view of mere communication, but of permanence.**)

அவ்வாறெனில் ஒருவரின் சொற்பொழிவையும் நூலாக்கி இருக்கின்றார்களே! அஃது ஏன்? பல இடங்களிலும் பரந்து விரிந்து கிடக்கும் பல்லாயிரக் கணக்கான மக்களையும் ஒரே நேரத்தில் கண்டு பேச இயலாது. அவர்களும் படித்துப் பயன் பெறும் பொருட்டே அப்பேச்சும் நூல் வடிவில் உள்ளது. நூலைப் பற்றி வேறு வகையாகக் கூறிவதென்றால், "நூலாசிரியரின் குரலைப் பலரும் கேட்கும்படி பன்மடங்காகப் பெருக்கிக் காட்டுவதே நூலாகும் (**The volume is mere multiplication of his voice.**)

நூலின் வகைப்பாடுகள்

நூல்களை இருவகையாகப் பிரிக்கலாம்:

1. நின்று நிலைத்த பயன் தரவல்ல நூல்கள் (**Books of all times**)
2. தற்காலிகப் பயனுடைய நூல்கள் (**Books of the hour.**)

தரத்தையும் பயனையும் வைத்து நூல்களை இருவகையாகப் பிரித்தாலும், 'நூல் எனும் பொழுது, பெரும்பாலும் அது நின்று நிலைத்த பயன் தரவல்ல சிறந்த நூல்களையே குறிக்கும்! அதனால் தற்காலிகப் பயனுடைய நூல்கள் இல்லையென்றோ அவற்றைப் பொருட் படுத்த வேண்டாமென்றோ பொருள் ஆகாது.

தற்காலிகப் பயனுடைய நூல்கள், நம்மால் நேரில் கண்டு பேச இயலாத மக்களின் இனிய பயனுள்ள பேச்சைப் போன்றவை. அவை நாம் அறிந்து கொள்ள வேண்டிய பயனுள்ள பல செய்திகளைத் தருகின்றன. நெருங்கிய நண்பனின் சுவையான பேச்சைப் போன்று இன்பம் பயக்கின்றன.

தற்காலிகப் பயனுடைய நூல்கள், நூல்களே அல்ல. அவை, சிறந்த முறையில் எழுதப் பெற்ற மடல் போன்றவை. திறம்பட அச்சடிக்கப் பெற்ற செய்தித் தாள்களைப் போன்றவை. நண்பனிடமிருந்து அன்று வரப் பெற்ற மடல் மகிழ்ச்சியூட்டக்

கூடியதாயும் தேவையானதாயும் இருக்கலாம்! அவ்வாறே இன்று படித்துப் பயன் பெறும் செய்தித்தாள் இன்றைக்குத் தேவையானதாய் இருக்கலாம்! ஆனால் அவற்றை என்றென்றும் பேணிக்காத்து வர வேண்டும் என்ற கட்டாயத் தேவை இல்லை.

ஆனால் நின்று நிலைத்த பயன் தரவல்ல நூல்களை என்றென்றும் பேணிக்காத்து வரவேண்டும். நெடுநாள் பயனுடைய நூல்களை, அவற்றைப் படைக்கும் ஆசிரியன், தன் கருத்துகளை வழங்க வேண்டும், நூல் வாயிலாகத் தன்னை எல்லா மக்களும் காண வேண்டும் எனும் நோக்கொடு, மக்கள் அவற்றை என்றென்றும் பேணிக்காத்து வரவேண்டும் என்னும் உள் நோக்கோடும்தான் படைக்கிறான்.

நூலாசிரியன்: "ஒரு நூலாசிரியன் ஏன் எழுதுகிறான்? எதனால் எழுதுகின்றான்? அவனை எழுதத் தூண்டும் ஊக்கிகள் யாவை? என்பதைப் பற்றிச் சிறிது எண்ணிப் பார்ப்போம்.

ஒரு நூலாசிரியன் மக்கள் இனத்தின்மேல்—மக்கள் நலத்தில்—அன்பு கலந்த அக்கறை கொண்டிருக்கிறான். அதனால் மக்கள் இனம் உய்யும் பொருட்டுச் சிலவற்றைக் கூற விரும்புகின்றான். தான் கண்டவற்றை, கேட்டவற்றை, துய்த்தவற்றை இந்த மக்கள் இனமும் கண்டு கேட்டுத் துய்த்து இன்புற்றுப் பயன் அடைய வேண்டும் என்ற உயர்ந்த எண்ணமே அவனை எழுதத் துண்டுகின்றது. தன்னை—தன் அக நிலையை—எழுத்து வாயிலாகப் பிறர்க்குக் காட்ட வேண்டும் என்ற ஆவலே அவனை எழுத உந்துகிறது. அவனைப் பொறுத்த வரையில் அவன் கூற வரும் எந்த ஒரு பொருளும் இதுவரை வேறு எவரும் கூறாத, தன்னைத்தவிர வேறு எவராலும் தன்னைப்போல் கூற இயலாத ஒன்றாகவே உள்ளது. ஓர் எழுத்தாளன் தான் கூற விரும்புவதைத் தெளிவாக, திருத்தமாக, திறம்பட, சுவைபட எடுத்துக்கூற வேண்டும். அவ்வாறு கூறப்பெற்று எழுத்து வடிவில் உள்ளவையே 'நூல்' என அழைக்கப்பெறும்.

நாம் சிறந்த பல நூல்களைப் பயிலவேண்டும். இன்று படித்துப் பயன்பெற வேண்டிய ஒன்றைத் தவற விட்டால், நாளை நம்மால் மீண்டும் பெற இயலாது. பெரும் அரசர்களோடும், அரசிகளோடும் பேசி மகிழ்வதற்கு வாய்ப்பிருக்கும் பொழுது எளிய ஒரு சிறுவனிடமோ, வேலைக்காரியிடமோ வம்பளந்து நேரத்தை வீணடிக்க நாம் விரும்புவதில்லை. அவ்வாறே படித்துப் பயன் பெறுவதற்கென்றே பல அரிய நூல்கள் நமக்காகவே காத்துக்கிடக்கும் பொழுது, அதை விடுத்து வீண் வேலையிலும், வெட்டிப் பேச்சிலும் காலத்தை வீணடிப்பது முட்டாள் தனமாகும்.

செல்வர் வறியர், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாடின்றி எவரும் பொத்தக உலகில் நுழையலாம். நாமாகத் துறந்தாலன்றிப்

பொத்தக உலகம் நம்மைத் துறப்பதில்லே. ஆனல் அங்கே நுழைய விரும்புபவர்க்கு உண்மையான உள்ளமும், ஆர்வமும், அயரா உழைப்பும் வேண்டும். இவற்றைத் தவிர பெருந்தொகையைக் கையூட்டாகக் கொடுத்தோ, ஒரு பெரும் புள்ளியின் பரிந்துரையைப் பெற்ருே அங்கு நுழைய முடியாது. இதை வேறு வகையில் சொல்வ தென்ருல், இழிந்தவர்களும் கீழ்மையான உள்ளம் படைத்தவர்களும் அங்கே நெருங்கவும் முடியாது.

ஒருவன், நூலகங்களில் குவிந்து கிடக்கக் கூடிய கணக்கற்ற சுவடிகளில் மாண்டு மறைந்து கிடக்கக் கூடிய கலேஞர்களோடும், புலவர்களோடும், அறிஞர்களோடும் எந்த அளவிற்கு உயர்ந்ததோர் இடத்தைப் பிடிக்க விரும்புகின்ருஞே அதைப் பொறுத்தே அவன் வாழும் உலகில் அவனுக்குரிய இடமும், உயர்வும் சிறப்பும் அமை கின்றன.

ஒரு நூலே எவ்வாறு அணுகுவது?

I இப்பொழுது உயிர் வாழ்ந்து வரும் அறிஞர்களும், மெய்ப் பொருளோதிகளும் (Phiolsopher) தங்கள் கருத்துகளைக் கூறும் பொழுது, கேட்போரின் அறிவுநிலேக் கேற்பத் தங்களின் அறிவு நிலேயிலிருந்து தாழ்ந்துவந்து அவர்களுக்கு விளங்கும்படி விரிவாகவும் விளக்கமாகவும் கூறுவர். ஆனல் ஒரு நூலாசிரியன் தான் கூறவரும் கருத்துகளைப் படிப்போரின் அறிவு நிலேக்கேற்பத் தாழ்ந்து வந்து கூறுவான் என்று எதிர்பார்க்க முடியாது. **“அவனுடைய கருத்துகளையும் உள்ளத்து உணர்ச்சிகளையும் விளங்கிக் கொள்ள வேண்டுமானல் நாம், அவனுடைய நிலேக்கு உயர்ந்து செல்ல வேண்டும். அவனே நம்முடைய நிலேக்கு இழுத்துவர முயலக் கூடாது”** இதைக் கருத்தில் கொண்டுதான் நாம் ஒரு நூலே அணுக வேண்டும்.

“இவன் என்ன புதிதாகச் சொல்லிவிடப் போகின்ருன்? எல்லோ ரையும் போலவே இவனும் அரைத்த மாவைத்தான் அரைக்கப் போகின்ருன்” என்னும் சலிப்போடும், வெறுப்போடும் ஒருநூலே அணுகக் கூடாது. மாருக, “நூலாசிரியரிடமிருந்து சில பல நற்கருத்துகளைத் தெரிந்து கொள்ளலாம். கூர்ந்து நோக்கி, ஆழ்ந்து எண்ணிப் பார்த்தால் அவரின் கருத்துகளே சரிவர விளங்கிக் கொள்ளலாம்”. எனும் உண்மையான விருப்பொடும், ஆவலொடும் தான் அணுக வேண்டும்.

நூலில் கூறப்பெற்றுள்ள கருத்துகள் யாவை? என்பதைத்தான் காண வேண்டுமேயன்றி, நம்முடைய – படிப்போரின் — கருத்துகள் நூலில் கூறப்பட்டுள்ளனவோ? என்று எதிர்நோக்கக் கூடாது.

மேலும், நூலில் கூறப் பெற்றுள்ள கருத்துகளை நூலாசிரியனின் கண்ணோட்டத்தினின்று காணவேண்டுமேயன்றி, நம்முடைய—படிப் போரின் கருத்துகளையும் கண்ணோட்டத்தினையும் நூலாசிரியனின் கருத்திலும் கண்ணோட்டத்திலும் புகுத்தக் கூடாது.

அதனால் நூலாசிரியனின் கருத்துகளை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றோ அவன் கூறும் கருத்துகள் வாழ்க்கைக்கு ஏற்புடையவையா? இல்லையா? என்பதை ஆய்வு செய்து பார்த்து ஒரு தெளிந்த முடிவிற்கு வரக்கூடாது என்பதோ பொருள் ஆகாது.

ஒரு நூலாசிரியனின் கருத்துகளை நாம் ஆய்வு செய்யலாம்! எப்பொழுது?

ஆய்வு செய்வதற்குரிய தகுதியும் திறமையும் நம் மிடம் உள்ளனவாவென்று பார்த்துக் கொள்ளவேண்டும். அத்துடன் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளும் கருத்து, ஆய்வு செய்வதற்கு ஏற்றதுதானா என்பதையும் உறுதிப் படுத்திக் கொள்ளல் வேண்டும். மேலும் குறிப்பிட்ட ஒரு நூலாசிரியனை ஒரு முறைக்குப் பன்முறையாக ஊன்றிப் பயின்றால்தான் அவனுடைய கருத்துகளை நம்மால் தெளிவாக விளங்கிக் கொள்ள இயலும் என்ற நிலை ஏற்படும் பொழுதும் அவனுடைய கருத்துகளை நாம் ஆய்வு செய்யலாம்.

ஒரு நூலைப்படிக்கும் பொழுது, எடுத்த எடுப்பிலே நூலாசிரியன் தான் உணர்த்த விரும்பும் கருத்தை, மற்றவர்கள் உணரும்படி ஆணித் தரமாக எடுத்துக் கூறவில்லையே என்னும் முடிவிற்கு வந்துவிடக் கூடாது. ஒரு பொருளைப் பற்றியோ, ஒரு சிக்கல் குறித்தோ கூற வரும் நூலாசிரியன் அதோடு தொடர்புடைய எல்லாக் கருத்துகளையும் வெளிப்படையாகக் கூறிக்கொண்டு இருக்க முடியாது; கூற வேண்டும் என்ற கட்டாயத் தேவையும் இல்லை. அவற்றினைக் குறிப்பாகவோ மறைமுகமாகவோ அல்லது அறநெறிக் கதைகள் வாயிலாகவோ கூறிச் செல்லலாம்.

கடலில் மூழ்கினால் தான் முத்துக் கிடைக்கும்! நிலத்தை வெட்டினால்தான் பொன் கிடைக்கும். அவ்வாறே அரிதில் முயன்று ஆழ்ந்து எண்ணிப் பார்த்தால்தான் அறிஞர்களின் அரிய சீரிய கருத்துகளை நம்மால் பெற இயலும். அறிஞர்கள் தம்முடைய கருத்துகளைக் கடனாகவோ, இலவயமாகவோ கொடுப்பதில்லை. நம் முடைய அறிவு முயற்சிக்கும் உழைப்பிற்கும் ஏற்ற அன்பளிப்பாக வழங்குகின்றார்கள். எனவே நூலாசிரியனின் உள்ளத்தை உள்ள படியே கண்டு, உண்மைப் பொருளை அறிந்து கொள்கின்ற ஆர்வமும் முனைப்பும் நமக்கு இன்றியமையாது இருத்தல் வேண்டும்.

—(தொடரும்)

ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்:

மருத்துவ அறிஞர்: **கோ. கோவிந்தனார்.**

நாம் விளக்கிய சிக்கல் ஒரு பெரிய சிக்கலின் மிகச்சிறு பகுதியாகும். புணர்ச்சியின்போது உடலில் என்ன என்ன நடக்கின்றன என்பது இன்னும் விளங்காத புதிராகவே இருந்து வருகிறது. புணர்ச்சியின்போது, மூளையிலுள்ள குருதியின் அளவும், அழுத்தமும் மிகுதியாகின்றன. உடற்சூட்டை ஒழுங்குபடுத்தும் தன்மை தாக்கப்படுகிறது. அதனால் உடற்சூடு மிகுதியாகின்றது. இந்த உடற்சூட்டின் மிகுதி, உடலில் உள்ள கண்ணறைகளில் பல வேதியில் மாற்றங்கள் ஏற்பட உதவுகின்றது. கவிழ்சுரப்பி *(Prostate)* உப்பி அதனின்றுவரும் நீர் மிகுதியாகின்றது. ஒளிமுதல் பைகள் நீண்டு விறைப் படைகின்றன. ஒளிமுதல் பைகளின் தசைகள் சுருங்குகின்றன. இச்சுருக்கத்தால் ஒளிமுதல், தள்ளும் தூம்பை வந்தடைந்து பின் சிறுநீர் புற வழிக்குப் போய்ச் சேருகிறது. புணர்ச்சியின் போது எல்லாத் தூம்பற்ற சுரப்பிகளும் கூடுதலான அளவில் வேலை செய்வதால் புணர்ச்சி செவ்வனே நடப்பதற்கு வேண்டிய அளவு வேதிச்சுரவுகள் *(Hormones)* கிடைக்கின்றன. **பிட்யூட்டரி**, கேடயச்சுரப்பி *(Thyroid)* குண்டிக்காய் சுரப்பி, *(Atrinale)* ஆகியவைகள் தாக்குதலுக்கு உள்ளாகின்றன. உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்பும் மிகுதியாக வேலை செய்கிறது. உமிழ் நீர் சுரப்பிகளும், வேர்வைச் சுரப்பிகளும் மிகுதியாகச் சுரக்கின்றன. நெஞ்சம் படபட என்று மிக விரைவுடன் அடித்துக் கொள்கிறது. பெருமூச்சு வெளி வருகின்றது. உள் உறுப்புகள் ஒவ்வொன்றிலும் கூடுதலான விறைப்பும் அழுத்தமும் உண்டாகின்றன.

பால் உணர்ச்சியைச் செயல்படுத்தும் பொழுது, அஃதாவது புணரும்பொழுது எவ்வளவு சிக்கலான நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன என்பதைப் பார்த்தோம். இந்த சிக்கலான நிகழ்ச்சியில் ஓர் இடத்தில் தடை ஏற்பட்டாலும், அல்லது செய்கை மாறுபட்டாலும் புணர்ச்சியை வெற்றிகரமாக நிறைவேற்ற இயலாது. ஆகவே நாம் நினைத்துக் கொண்டிருக்கிறுமே அலித்தன்மை ஏதோ ஒரு கரணியத்தால் மட்டும் தான் ஏற்படுவது என்று, அதுதான் இல்லை. இந்தச் சிக்கலான ஒன்றுக்கொன்று இணைந்த போக்கில் எங்கேனும் ஓர் இடத்தில் குற்றம் ஏற்பட்டால் போதும், அலித்தன்மை ஏற்பட்டு விடும். அந்தக் குற்றமுள்ள இடத்தைச் சரி செய்து விட்டால் அலித்தன்மை நீங்கிவிடும்.

ஆணின் கலவி உறுப்புகளின் அமைப்பு எளிய முறையில் அமைந்ததன்று. ஆணின் இனப்பெருக்க முறை, பல, ஒன்றுக்

கொன்று இணைந்து வேலை செய்யக்கூடிய உறுப்புகளால் நடை பெறுகிறது. இதில் தொடர்புடைய ஒவ்வோர் உறுப்பும் ஒரு சிக்கல் குவியல். ஆண்மை, முழு ஆண்மை நிலையில் இருக்க வேண்டுமானால், ஒவ்வோர் உறுப்பும் நல்ல நிலையில் இருக்க வேண்டும். ஒன்றோடு ஒன்று ஒத்து இணைந்து இயங்க வேண்டும். ஆண் பிறப்புச் சுரப்பிகளான விதைகளும், ஆண் குறியும் ஆண் கலவி உறுப்புகளில் வெளியே தெரிபவை. விதைகள் இரண்டும் தோலால் ஆன பைக்குள் வைக்கப்பட்டுத் தொடைகள் இரண்டிற்கும் இடையில் தொங்கு கின்றன. விதைகளுக்கு இடையில் ஆண்குறி பொருத்தப்பட்டுள்ளது. பெண்ணுடன் சேர்க்கை ஆண்குறியின் மூலமாகத்தான் நடைபெறு கிறது. ஆண்குறியின் மூலமாகத்தான் பெண்குறியின் உள்ளே,— நன்கு உள்ளே—ஒளி முதலை விட இயல்கிறது. இதனால் கரு உருவாவதற்கு வேண்டிய சூழ்நிலை ஏற்படுத்தப்படுகிறது. ஆண் கலவி உறுப்புகளில்,—உடலின் உள்ளே உள்ளவற்றில்—ஒளி முதல்,பைகள், **கவிழ்** சுரப்பி, **கூப்பர்** சுரப்பி ('Cowper's glands) ஆகியவை முதன்மையானவை. இவற்றைச் சுற்றியுள்ள சவ்வு களும், தூம்புகளும் இவ்வுறுப்புகள் தங்கள் வேலைகளை ஒழுங்காகச் செய்ய உதவுகின்றன. இவ்வுறுப்புகளுடன், இச்சவ்வுகளும், தூம்பு களும் முதன்மையானவையே.

விதை ஒவ்வொன்றும் முட்டை வடிவானது. முழு வளர்ச்சி பெற்ற விதை இரண்டு விரற்கிடை நீளமும் ஒரு விரற்கிடை அகலமும், ஒன்றரை விரற்கிடை உயரமும் உடையது. ஆண்குறிக்குப் பின் புறத்தில் நீண்டு தொங்கும் தோலால் ஆன பைக்குள் விதைகள் பக்கத்திற்கு ஒன்றாகத் தொங்கிக் கொண்டிருக்கின்றன. விதைப்பை தோலால் ஆனது. இத்தோல் சுருங்கிக் காணப்படும். இவ்விதைப் பையின் தோலின் உள்ளே கொழுப்புப் பொருள் கசியும் கோளங்கள் மிகுதியாக உள்ளன. ஆண், வளர்ச்சி அடைந்ததும் இத்தோலின் மீதும் மயிர் மிகுதியாகக் காணப்படும். சுற்றியுள்ள வெப்ப நிலை யையும், மன நிலையையும் ஒட்டி இப் பை தொய்ந்தோ அல்லது சுருங்கியோ காணப்படும். குளிர் காலத்தில் விதைப்பையின் தோல் சுருங்கிக் காணப்படும். பால் உணர்ச்சி ஏற்படும்பொழுது இப்பை சுருங்கிக் காணப்படும். கோடையில் தோல் பை தொய்ந்து இருக்கும். பொதுவான நிலையிலும் இப் பை தொய்ந்தே தான் இருக்கும். தோல் பையில் விதைகள் இரண்டும் பக்கத்திற்கு ஒன்றாக, ஒரே மட்டமான அளவில் தொங்கிக் கொண்டிருப்பதில்லை. ஒன்றைவிட ஒன்று சற்று ஏற்றத் தாழ்வான நிலையில் தான் அமைந்திருக்கின்றன. இடது பக்கத் தோல் பை சிறிது நீண்டும், வலது பக்கம் சற்றுக் குறைந்தும் காணப்படும். விதைகள் இரண்டையும், தோல் பையின் நடுவே உள்ள தடித்த சவ்வு, வலது இடது எனத் தனித்தனியே பிரிக்கின்றது. விதையை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். முன்னால் உள்ளது பருமனான பகுதி. இது விதையின் உடல் எனப்படும். இதுவே

சுரப்பி. பின்னுல் உள்ள பகுதி **சுருள்குழல்** (Epididymis) எனப்படும். இது நீண்ட குழாய்களால் ஆயது. இக்குழாய்கள் திருப்பித்திருப்பி பின்பக்கமாக மடிக்கப்பட்டு, ஒரு திரளாக விதையின் பின் பகுதியின்மேல் அமைந்திருக்கின்றன. இதன் வழியாகத்தான் விதையிலிருந்து சுரந்த நீர் பொறிக்குழலுக்குச் செல்கின்றது. இந்த பொறிக்குழல் வளைந்து வளைந்து அமைந்திருக்கிறது. **சுருள் குழலின்** தொடர்ச்சியேதான் இந்தப்பொறிக்குழல். விதையின் மேல் கூற்றை ஒருவகைச் சவ்வு மூடிக் கொண்டிருக்கிறது. இச்சவ்வின் மற்ருெரு நுனி மடிந்து தோல் பையின் உட்புறத்தை அழுத்திப் பதிந்திருக்கும். ஆகவே தோல்பைக்கும், விதைக்கும் இடையே வாய் இல்லாத ஒரு பை ஏற்படுகின்றது. **சுருள்குழலின்** தலைக் கூறு விதையுடன் இணைக்கப்பட்டுள்ளது. வால் போன்ற நீண்ட கூறு பொறிக் குழலாகத் தொடர்பாகின்றது என்பதைப் பார்த்தோம். இவ்வாறு **சுருள்குழலில்** இருந்து துவங்கும் பொறிக் குழல்கள் விதைக்கொடி வழியே பின்புறமாக மேலே சென்று விதைக் கொடித் துளை என்ற தொடை இடுக்கில் உள்ள சிறிய துளையின் மூலம் பக்கத்திற்கு ஒன்ருக வயிற்றினுள் செல்கின்றன. அங்கிருந்து சிறுநீர் பையின் பின்புறமாக அதன் அடியில் இறங்கி அங்கு அமைந்துள்ள ஒளிமுதல் பை என்பதுடன் சேர்ந்து ஒரே குழலாகின்றன. அக்குழல் சிறுநீர் புற வழியில் முடிவடைகிறது. இந்த முடிவடையும் இடத்திற்கு, தள்ளும் தூம்பு என்று பெயர். பொறிக் குழல் ஒவ்வொன்றும் ஏறத்தாழ பதினெட்டு விரற்கிடை நீளமுள்ளது. சிறுநீர் பையின் அடியில் பக்கத்திற்கு ஒன்ருக ஒளிமுதல் பை ஏறக் குறைய இரண்டு விரற்கிடை நீளமுடையது. ஒளிமுதல் பையின் கீழ் பகுதியில் முக்கால் விரற்கிடை நீளமுள்ள ஒருசிறு குழல் காணப்படும். இதற்கு ஒளிமுதல் பை குழல் எனப்பெயர். பொறிக் குழல்கள் இரண்டும் ஒன்ருக இணைந்து தள்ளும் தூம்பாக மாறுகின்றன. இந்த தள்ளும் தூம்பு சிறுநீர்ப் புற வழியுடன் முடிவடைவதால், புணர்ச்சியின்போது, ஒளிமுதல் சிறுநீர் புற வழிக்கு வந்து சேர முடிகிறது.

விதையிலிருந்து சுரந்த நீர் **சுருள்குழல்** வழியாக பொறிக் குழலுக்கு வந்து பின் ஒளிமுதல் பையை அடைகின்றது. இங்கு சேர்க்கப்படுகிறது. இத்துடன் வேறு சுரப்பிகளிலிருந்து வந்த நீர்களும் கலக்கின்றன. விதை, ஒளிமுதலில் உள்ள ஆண் கரு அணுக்களை உண்டாக்குகின்றது. இந்த ஆண் கரு அணு தான் பெண்ணிலிருந்து வரும் முட்டையுடன் சேர்ந்து கருவை உண்டாக்குகிறது. கரு முதிர்ந்து பிள்ளை பிறக்கின்றது. ஒளிமுதலில் உள்ள பொருள்கள் முழுவதுமே விதையிலிருந்து மட்டும் கிடைப்பதன்று. விதையிலிருந்து ஆண்கரு அணுக்களும், நூற்றுக்குப் பத்து மேனி நீரும் கிடைக்கின்றன. மீதமுள்ள ஒளிமுதலின் பொருள்கள், **கவிழ் சுரப்பி**, சிறுநீர்ப் புறவழி, ஒளிமுதல் பை மற்றும் சில சிறிய

சுரப்பிகள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கின்றன. ஆண் கரு அணுக்களை உண்டாக்குவது ஒன்று தான் விதையின் வேலை என்பதன்று. ஆண்கரு அணுக்கள், விதையின் உள் விரவி யுள்ள சுரப்பி கண்ணறைகளிலிருந்து உண்டாகின்றன. சுரப்பி கண்ணறைகளுக்கு இடையே இடைக் கண்ணறைகள் அமைந்துள்ளன. இவை ஒருவகை **வேதிச்சுரவுகளைச்** சுரக்கின்றன. உடலின் முழு வளர்ச்சிக்கு இந்த வேதிச்சுரவு இன்றியமையாதது. அத்துடன் உடலில் உள்ள உறுப்புகள் இயைந்து இயங்குவதும் இந்த வேதிச்சுரவியினால்தான். இடைக் கண்ணறைகளில் சுரக்கப்படும் இந்த வேதிச்சுரவு சுரக்கப் படுவது தடைப்பட்டால், உடலில் பலவகை மாறுதல்கள் தோன்று கின்றன. பையன் வளர்ந்து வரும்பொழுது இந்த வேதிச்சுரவு இல்லையானால். அவன்ஆண் மகனுக்கு உரிய குறிகளுடன் காணப்படுவதில்லை. தாடி வளராது. முன் இடுப்புப் பகுதியில், அதாவது ஆண் குறிக்கு மேலே உள்ள இடத்தில் மயிர் முளைப்பதில்லை. ஆண் கலவி உறுப்புகள் முழுவளர்ச்சி அடையா. குரல், பெண் குரல் போல் கீச்சிட்டிருக்கும். மார்பு வளர்ந்து தொங்கும். குண்டியில் சதைப்பற்று ஏற்படும். சுருங்கக்கூறின், பையன், ஆணாக வளர்வதற்குப் பகரமாக பெண்ணாக வளருவான். இடைக் கண்ணறைகளில் சுரக்கப்படும் வேதிச்சுரவு அழிக்கப் பட்டாலோ அல்லது அளவில் குறைந்தாலோ மூப்புத்தன்மை வந்தடையும் இதைப் பின் விளக்குவோம்.

ஆண் கலவி உறுப்புகளுக்குள் இதுதான் முதன்மையானது என்று எதையும் குறிப்பிட்டுக்கூற இயலாது ஏன் எனில் ஒரு உறுப்பு கெட்டாலும், பால் உணர்ச்சி மிகுதியாகத் தாக்கப்படுகிறது. இருப்பினும், ஆண் கலவி உறுப்புகளுள், ஆண் குறியை முதன்மையானது எனக்கொள்ளின் குற்றமில்லை. அஃதின்றேல் புணர்ச்சி என்ற பேச்சிற்கே இடமில்லையன்றோ? ஆண்குறியை மூன்று கூறுகளாகப் பிரிக்கலாம். தலைக்கூறு பூ எனப்படும், நடுக்கூறு அதாவது உடற்கூறு தண்டு எனப்படும். மூன்றாவது. கூறு அடிக்கூறு எனப் படும். அடிக்கூறிலிருந்து தசைகள் கிளம்பி ஆண் குறியை இடுப்புடன் இணைக்கின்றன. பொதுவாக ஆண்குறி தொய்ந்து கீழ் நோக்கித் தொங்கிக் கொண்டிருக்கும். அது மென்மையான ஒரு வகைத் தசைகளினால் ஆன உறுப்பு. எழுச்சி ஏற்பட்டால் உறுதியாகவும், அழுத்தமாகவும், வயிற்றை நோக்கிச்சிறிது வளைந்து மேல் நோக்கியும் நிற்கின்றது. ஆண்குறி, மழமழப்பான மெல்லிய தோலால் மூடப்பட்டுள்ளது. இத்தோல் மிகுதியாகச் சுருங்கி விரியும் ஆற்றல் உடையது. இத்தோல் ஆண்குறியை தொள தொளப்பாக மூடியுள்ளது. ஆண்குறியின் மூன்று கூறுகளில் இரண்டு கூறுகள் எழும்பும் ஆற்றல் உடைய தசைநார்ப் பொருள்களால் ஆக்கப் பட்டுள்ளன. இப்பொருள்களால்தான் ஆண்குறி, எழுச்சி அடையும் பொழுது, விறைப்பும், அழுத்தமும் அடைகின்றது. இத்தசைநார்ப் பொருள்களை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். இரண்டு பகுதிகள்

ஆண்குறியின் மேல் கூறில் அமைந்துள்ளன. படுக்கை நிலையில், அவை இரண்டும் ஒரே உறையினுள் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கு, முழைப் பொருள்கள் எனப்பெயர். ஆண்குறியின் பெரும்பகுதி இப்பொருள்களால் ஆனதுதான். இவை அடிப்பகுதியிலிருந்து பூப்பகுதியின் அடியில் உள்ள பள்ளம் வரை பரவி உள்ளன. மூன்றாவது கூறும் எழும்பும் ஆற்றல் உடையதே. இது முன் கூறப்பட்ட இரண்டு எழும்பும் பொருள்களுக்கு அடியில் அமைந்துள்ளது. இது மென் பொருள் எனப்படும். அடிக்கூறில் இதுபுடைத்துக் கொண்டு கிளம்பி ஆண்குறியின் முழு நீளம் வரை பரவி, நுனியில் பரந்து விரிந்து பூப்பகுதியை உண்டாக்குகின்றது. பூ வழவழப்பாக இருக்கும். அதன் நுனி உருண்டு இருக்கும். இங்கு தான் சிறுநீர் புற வழியின் துளை அமைந்துள்ளது. சிறுநீர் புறவழி அஃதாவது சிறுநீரைத் தாங்கிச் செல்லும் தூம்பு மென்பொருளால் சூழப்பட்டுள்ளது. எழும்பும் பொருள்கள் முழுவதையும், உறுதியான தசை நார்களால் ஆன ஓர் உறை சூழ்ந்துள்ளது. இவ்வுறை மிக உறுதியானது; சுருங்கி விரியும் ஆற்றல் உடையது. இவ்வுறை, எழும்பும் பொருள்கள் நீளுவதை ஓர் அளவு வரை நீளத்தான் இடம் கொடுக்கின்றது. அந்த அளவுக்குமேல் நீள இடம் கொடுப்பதில்லை. இவ்வாறாக ஆண்குறி, எழுச்சி அடையும் பொழுது அதன் நீளும் அளவு கட்டுப்படுத்தப் படுகின்றது. புணர்ச்சிக்கு ஆண் குறியின் எழுச்சி எவ்வளவு இன்றியமையாததோ அவ்வளவு இன்றியமையாதது அதன் விறைப்பும், அழுத்தமும். விறைப்பும் அழுத்தமும் இன்றேல், ஆண்குறியால், பெண் குறியின் உள் புகுந்து செல்ல இயலாது. ஆண்குறியின் எழுச்சி இல்லாமையும், வேண்டிய அளவு விறைப்பும் அழுத்தமும் இல்லாமையும் தாம் அலித்தன்மையால் துன்புறும் பெரும்பாலோருக்கு உள்ள குறைகளாகும்.

எழுச்சி எவ்வாறு ஏற்படுகிறது. எவ்வாறு செயல்படுகிறது. எழுச்சி உண்டாகும்படி தூண்டுவன யாவை என்பவை, மருத்துவ உலகிற்கு பல நூற்றுண்டுகள் வரை பிடிபடாமல் தப்பி வந்தன. பத்தொன்பதாம் நூற்றுண்டில் தான் எழுச்சி, நரம்பு மண்டிலத்தின் கீழ் அடங்கியது என்று கண்டு பிடிக்கப்பட்டது. ஆண் குறிக்கு மிகுதியாகக் குருதி வந்து சேர்ந்தால் ஆண்குறி எழுச்சி அடைகிறது. மிகுதியான குருதி வந்து சேர்வதால் ஏன் எழுச்சி பெற வேண்டும் என்பதைப் பத்தொன்பாம் நூற்றுண்டிலிருந்து தான் அறிய முடிந்தது. எழுச்சியை அடக்கி ஆளும் நரம்புகள் ‘எழுச்சி நரம்புகள்’ என அழைக்கப் படுகின்றன. இந்த நரம்புகள் முதுகுத் தண்டில் அமைந்துள்ள நடுவழியாகத் தூண்டப்படுகின்றன. என்பதை முன்பே பார்த்தோம். எவ்வகைத் தூண்டும் பொருள் இன்றியே, ஆண்குறியின் எழுச்சி எழுச்சிப் பொருள்களின் தனித் தன்மையான அமைப்பால்கூட உண்டாகலாம். எழுச்சிப் பொருள்கள் மென் பொருள்களால் ஆனவை. அவற்றில் பல துளைகள் உள்ளன.

பயிரை மேயும் வேலிகள்.

—தமிழவேள்.

பல நெடுங்கதைகளையும் சிறுகதைகளையும் எழுதிப் புகழ்பெற்ற எழுத்தாளர் ஒருவர், பொதுவுடைமைக் கோட்பாட்டில் பற்றுக் கொண்டவர். ஒரு முறை ஒரு கிழமை இதழில் ஒரு தொடர்கதை எழுதினார். அந்தக் கதையின் தலைப்பு "ஒரு மனிதன், ஒரு வீடு, ஒரு உலகம்" என்பது.

எந்த மொழிக்கும் சில மரபுகள் உண்டு. அந்த மரபுகளைப் பின் பற்றுவதில்தான் அம்மொழியின் வாழ்வு இருக்கின்றது. "மரபுகளைப் பற்றி நான் கவலைப் படமாட்டேன். என் விருப்பம் போல் தான் எழுதுவேன்" என்று பிறமொழி எழுத்தாளர் எவரும் சொல்வதில்லை. எழுதுவதில்லை.

ஆங்கிலத்தில் **A.E.I.O.U.** என்னும் ஐந்தும் உயிர் எழுத்துகள் போன்றவை. இந்த எழுத்துகளை முதலாகக் கொண்டு அமையும் சொற்கள் சில உண்டு. **Ass. Egg, Idea, Owl, Umbrella**-போன்றவை அவை. இந்தச் சொற்களுக்கு முன் ஒரு என்னும் பொருளைக் குறிக்கும் ஆங்கிலச்சொல் வரவேண்டும் என்றால், **'a'** என்னும் ஓரெழுத்துச்சொல் வரக்கூடாது. **'An'** என்னும் ஈரெழுத்துச்

(முன்பக்கத் தொடர்ச்சி)

துளைகள் வளைந்து வளைந்து முறுக்கி முறுக்கி அமைந்துள்ளன. ஆகவே இந்த மென் பொருள்கள் கால்வாய் கால்வாயாகத் தோற்ற மளிக்கின்றன. அஃதாவது அப்பொருள்கள் பல முழைகள் போன்று காணப்படுகின்றன. இம்முழைகளில் குருதி வந்து நிரம்பின உடன், இப்பொருள்கள் உப்பி இப்பொருள்களை மூடிய உறையைச் சுற்றி அழுத்துகின்றன. மென் பொருள்கள் நீளுவதற்கு ஏற்ப உறையும் நீளுகிறது. இவ்வாறாக ஆண்குறி எழுச்சி அடைகின்றது. நாம் இங்கு விளக்கிய எழுச்சி, முதுகுத்தண்டு நடுவிலிருந்து வரும் எழுச்சி நரம்புகளின் கட்டுப்பாட்டிற்குள் அடங்கியது. இவ்வெழுச்சி நரம்புகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒருவகை நரம்புகள் மிகுதியான குருதியை ஆண்குறியில் பாயச் செய்கின்றன. மற்றொரு வகை ஆண்குறியின் அடிக்கூறிலுள்ள தசைகளின் உதவியால் ஆண்குறியின் உள்ளே சென்ற குருதி வெளியேறாதபடி பார்த்துக் கொள்கின்றன. இவ்வாறாக புணர்ச்சி முடியும் வரை எழுச்சி குறை யாதபடி பார்த்துக் கொள்கின்றன.

இதுவரை புணர்ச்சியின் போது ஆண் கலவி உறுப்புகள் செய்யும் வேலைகளைப் பார்த்தோம். இக் கலவி உறுப்புகளில் எங்கேனும் ஓர் இடத்தில் கோளாறு ஏற்பட்டாலும் அலித்தன்மை உண்டாகும்.

(தொடரும்)

சொல்லே வரவேண்டும் என்பது மரபு; கட்டளை. அந்த மரபை மீறி எந்த ஆங்கில எழுத்தாளனும் **a ass, a egg, a idea, a owl, a umbrella** என்று எழுதுவதில்லை. **An ass, An egg, An idea, An owl, An umbrella** என்றே எழுதுகிறான்.

தமிழிலும் இது போன்றதொரு முறை உள்ளது. உயிர் எழுத்துகளை முதலாகக் கொண்டு அமையும் சொற்களுக்கு முன்னால் ஒரு என்ற சொல் வரக்கூடாது. ஓர் என்னும் சொல்லே வரவேண்டும் என்பது அது. அணில், ஆடு, இலை என்னும் சொற்களில் முதல் எழுத்தாக அமைந்திருக்கும் அ, ஆ, இ என்பன உயிர் எழுத்துகள். ஆகவே ஒரு அணில், ஒரு ஆடு, ஒரு இலை என்று எழுதக்கூடாது, ஓர் அணில், ஓர் ஆடு, ஓர் இலை என்று தான் எழுத வேண்டும்.

மாணிக்க வாசகர் போன்ற சமயத்தலைவர்கள் கூட இந்த மரபை மீறாமலே பாடியிருக்கிறார்கள்.

"ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடித் தெள்ளேணம் கொட்டோமே!"

என்பது திருவாசகம். உருவம் என்னும் சொல்லுக்குமுன் ஒரு என்னும் சொல்லைப் பயன்படுத்தாமல், ஓர் என்னும் சொல்லையே பயன்படுத்துகிறார் மாணிக்கவாசகர்.

இந்த மரபை மீறி எழுதப்பட்டத் தலைப்பு தான் "ஒரு மனிதன், ஒரு வீடு, ஒரு உலகம்" என்பது. ஒரு மனிதன் ஒரு வீடு என்பது சரி. ஒரு உலகம் என்பது சரியன்று. ஓர் உலகம் என்றே எழுத வேண்டும். அந்தத் தமிழ் எழுத்தாளர் இதனை அறியாதவரா? அறிந்தவர்தான். அவரே ஆங்கிலத்தில் A ass என்று எழுத மாட்டார். An ass என்று தான் எழுதுவார். தமிழில் மட்டும் ஓர் உலகம் என்று எழுதாமல் 'ஒரு உலகம்' என்று எழுதுகிறார் என்றால் என்ன சொல்வது. ஓர் உலகம் என்று எழுதினால் அந்தக் கதையின் சுவை என்ன கெட்டு விடுமா? அல்லது எதையும் படிக்கும் தமிழர்கள் என்ன அதைப்படிக்காமல் விட்டு விடுவார்களா? தமிழ் எழுத்தாளர்கள் இப்படி மரபு மீறி 'ஒரு உலகம்' 'ஒரு இடம்' என்று எழுதுவதைப் பார்க்கும்போது, வேலியே பயிரை மேய்கிறதே என்று தானே வருந்த வேண்டி இருக்கின்றது!

தமிழில் வெளிவரும் கிழமை இதழ்களில் ஒன்று, தமிழ், தமிழர் நலனைக் காட்டிலும் தன் சொந்த நலனே பெரிது என்று, கீழான உணர்வுகளைத் தூண்டுகின்ற வகையில் படங்களையும் கதைகளையும் துணுக்குகளையும் வெளியிட்டுப் பணம் திரட்டிக் கொண்டிருக்கும் இதழ் அது. அதில் வரும் வினா விடைப் பகுதியில் அதன் ஆசிரியர் கேள்விகளுக்கு விடையளிக்கிறார். தூய தமிழ்ச்சொல் ஒன்றைப் புனைபெயராக வைத்துக் கொண்டு விடையளிக்கிறார்.

அன்பர் ஒருவர் கேட்கிறார்! "இர என்று எழுதி 'ர' என்று ஒலிக்க வேண்டியதை பெரும்பாலும் எல்லாரும் 'இ' என்றே ஒலிப்பது சரியாகுமா?"

ஆசிரியர் அதற்கு விடையளிக்கிறார்; "ர'விலும் 'ல'விலும் தமிழ்ச்சொல் ஆரம்பிக்கக்கூடாது என்ற சங்க கால வழக்கத்துக்கு எப்போதோ முழுக்குப் போட்டாயிற்று.—இரமணி இரசித்துக் கொண்டே—'இலலிதா! இரசம் உருசியாக இருக்கிறது!' என்றான்—என்று எழுதிக் கொண்டிருப்பது?"

பிறமொழிச் சொற்களை எடுத்தாள்கின்றபோது அவற்றைத் தம் மொழியின் ஒலிக்கும் வழக்குக்கும் ஏற்ப எழுதுவதும் ஒலிப்பதும் தான் முறை. எல்லா மொழிகளிலும் இந்த முறை கடைப்பிடிக்கப் படுகின்றது. தமிழிலும் கடைப் பிடிக்கப்பட்டு வருகின்றது. "இராமன், இலக்குவன், இராவணன், இராமாயணம், இராமலிங்கம், என்பன போன்றவை அப்படி எழுதப்படும் சொற்களே.

'ர' 'ல' போன்ற எழுத்துகள் தமிழ்ச் சொற்களில் முதலாக வருவதில்லை. அந்த எழுத்துகளை முதலாகக் கொண்டு வருகின்ற பிறமொழிச் சொற்கள் தமிழில் எடுத்தாளப் படுகின்றபோது, இர, இல, அர, உரு, என்று தான் தொடங்க வேண்டும். அதனை அப்படியே ஒலிக்கவுந்தான் வேண்டும். அது கழகக் காலத்தில் மட்டும் இருந்த வழக்கு அன்று. இன்றும் உள்ள வழக்கு தான். அதைத் தமிழர்கள் விட்டுவிடவில்லை. பல ஆயிரக்கணக்கான தேன் தமிழ்ப்பாடல்களைப் பாடியிருக்கும் வள்ளலார் கூடத் தம் பெயரைச் 'சிதம்பரம்—இராம லிங்கம்' என்றே எழுதி வந்திருக்கிறார் என்பது அவருடைய கையெழுத்தைப் பார்த்தால் தெரியும்.

இவையெல்லாம் அந்த இதழாசிரியருக்குத் தெரியாது என்று சொல்வதற்கில்லை. தெரிந்தும் எழுதுகிறார் என்பது தான் வருத்தமாக இருக்கிறது. அவர் தம் விடையில், ஒரு சொற்றொடரைச் சொல்லியிருக்கிறாரே அதில் உள்ள ஏழு சொற்களில் இரண்டே இரண்டு தாம் தமிழ்ச் சொற்கள். இப்படிப் பிற மொழிச் சொற்களைத் தமிழ்ச் சொற்களினும் மிகுதியாகச் சேர்த்துத் தமிழை எழுத வேண்டுமா? பேச வேண்டுமா? அப்படிப் பேசவும் எழுதவும் விரும்பு கிறவர்கள் தமிழை விட்டுவிட்டு வேறு மொழியிலேயே எழுதிப் பேசி வரலாமே! அப்படிச் செய்வது அவர்களுக்கும் நல்லது. தமிழுக்கும் நல்லது அல்லவா?

'முழுக்குப் போட்டாயிற்று' என்று சொல்கிறாரே! முழுக்குப் போடுவது என்ற சொல் சாவோடு தொடர்புடைய சொல்லாயிற்றே! கைவிட்டு என்று சொல்லக் கூடாதா? முழுக்குப் போட்டாயிற்று என்றுதானா சொல்லவேண்டும்? இத்தகைய தமிழ் எழுத்தாளர்கள் தமிழ் வாழ்வதைக் காட்டிலும் செத்துவிட்டால் முழுக்குப் போட்டு விட்டுப் போய்விடலாம் என்று எண்ணுகிறவர்கள் போல் அல்லவா

இருக்கிறார்கள்? வேலியே பயிரை மேயும் இந்தக் கொடுமையிலிருந்து தமிழைக் காப்பாற்ற வேண்டாமா?

முப்பது ஆண்டுகளாகத் தமிழ்த் திரைப்படத்திற்குப் பாடல்கள் எழுதி வரும் பாவலர் ஒருவர். இதுவரை நாலாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்கள் எழுதியிருப்பதாகச் சொல்லிக் கொள்பவர். பாடல்கள் மட்டுமல்லாமல் கட்டுரைகளும் கதைகளும் கூட எழுதுபவர்.

அவர் அண்மையில் ஒரு கிழமை இதழில் அவருக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள பக்கத்தில் எழுதியிருக்கிறார். புதிதாகப் பாடல் எழுத வருபவர்க்கு அவர் சொல்கின்ற அறிவுரைகள் பலவற்றில் ஒன்றாக எழுதியிருக்கிறார். "வடமொழி வார்த்தைகளை அவசியமான இடங்களில் இலாவகமாகக் கையாளுங்கள்" என்கிறார்.

வடமொழிச் சொற்களைத் தமிழ்ப் பாடல்களில் எடுத்தாள வேண்டிய தேவை என்ன? தமிழ்ச் சொற்களில் சொல்ல முடியாத எந்தக் கருத்தை எந்த வடமொழிச்சொல் தெரிவிக்கிறது? வடமொழிச் சேர்க்கையால் தமிழுக்கு நேர்ந்த இன்னல்கள் போதாவா? வட மொழிச் சொற்கள் மிகுதியாகச் சேர்ந்ததாலேயே, தமிழிலிருந்து வேறு மொழிகளாகப் பிரிந்து சென்ற கன்னடம், தெலுங்கு, மலை-யாளம் போல் இன்னும் சில மொழிகள் பிரிந்து தமிழ் இருக்குமிடம் தெரியாமல் போக வேண்டும் என்பது அந்தப் பாவலரின் விருப்பமா?

வேண்டுமென்றே தேவையற்ற இடங்களில் கூட வடமொழிச் சொற்களைக் கையாள்வதில் பெருவிருப்பமுடையவர் அந்தப் பாவலர். அவர் ஒரு வரலாற்று நெடுங்கதையில் எழுதுகிறார். "அவள் சிரித்தாள். அந்தச் சிரிப்பு அவனது இதயத்தைப் புட்பங்களாலே ஊடுருவது போல் இருந்தது."

மனம், நெஞ்சம், மலர்கள், பூக்கள் என்ற அழகிய இனிய தமிழ்ச் சொற்கள் இருக்க, அவற்றை விட்டுவிட்டு இதயம், புட்பம் என்ற வடமொழிச் சொற்களுக்கு என்ன தேவை வந்துவிட்டது?

மற்றொரு நெடுங்கதையில் எழுதுகிறார்; "யோக்கியர்களைக் கடிக்கின்ற பாம்பு தானே சமுதாயத்தில் அதிகம்? பூவிலும் நாக மிருக்கும் பூவுலகில் வஞ்சக மறியாத புட்பங்கள் எப்படி வாழ முடியும்?" இங்கேயும் யோக்கியர்கள், புட்பங்கள் என்ற வடமொழிச் சொற்களுக்கு என்ன தேவை வந்து விட்டதோ? தெரியவில்லை!

தூய தமிழ்ச்சொற்கள் இருக்கும்போது அவற்றை விட்டுவிட்டுப் பிறமொழிச் சொற்களை எடுத்தாள்வது, அந்தத் தமிழ்ச் சொற்களை ஒன்று வழக்கிழக்கச் செய்கிறது. அல்லது இழிநிலைக்குத் தள்ளி விடுகிறது.

சோறு என்பது ஒரு தமிழ்ச்சொல். சோற்றின் வகைகளைக் குறிப்பதற்கு மட்டும் தமிழில் நாற்பதுக்கு மேற்பட்ட சொற்கள் இருக்கின்றன. இருந்தும் இன்று தமிழரிடையே பெருவழக்காக

இருப்பது பிறமொழிச் சொல்லாகிய 'சாதம்' என்பது தானே? 'சாதம்' என்ற பிறமொழிச் சொல் தமிழில் புகுந்ததால் சோறு என்னும் தமிழ்ச்சொல் வழக்கிழந்து வருகிறதன்றோ? ஏழை எளிய சிற்றூர்ப்புற மக்கள் சிலர்தாமே சோறு என்று சொல்கிறார்கள். பெரும்பாலோர் சொல்வது 'சாதம்' தானே? பிறமொழிச் சொல்லாகிய சாதம் புகுத்தப் படவில்லை என்றால் சோறு என்னும் சொல் தானே தமிழர் வாயெல்லாம் மணந்து கொண்டிருக்கும்.

நாற்றம் என்பது ஒரு தமிழ்ச்சொல். மணம் என்னும் பொருளில் தமிழரிடையே வழங்கி வந்திருக்கிறது. தமிழ் இலக்கியங்களில் எல்லாம் இந்த நாற்றம் என்னும் சொல் பயின்று வந்திருக்கிறது.

"சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு"

"இணர் ஊழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
உணர விரித்துரை யாதார்."

என்னும் குறட்பாக்களில் நாற்றம் என்னும் சொல் மணம் என்னும் பொருளில் தானே வருகின்றது.

"பொன்மலர் நாற்றம் உடைத்து" என்னும் நீதிநெறி விளக்கப் பாடல் அடியில் வரும் நாற்றம் என்பது மணம் தானே?

ஆனால் இன்று நாற்றம் என்னும் சொல் தமிழரிடையே எந்தப் பொருளில் வழங்குகிறது? மணத்துக்கு மாறான இழிந்த பொருளை யல்லவா அது தருகிறது! வாசனை என்னும் வடமொழிச் சொல்லுக்குத் தமிழில் இடம் தந்ததால் வந்த வினையல்லவா இது? இன்று சேர்க்கை வாசனை, வாசனைமல்லி என்றல்லவா சொல்கிறார்கள்? சேர்க்கை மணம் என்றோ மணமல்லி என்றோ சொல்வதில்லையே! மணம் என்னும் தமிழ்ச் சொல்லைக்கூட வாசனை என்னும் வடசொல் பின்னுக்குத்தள்ளி விடுகிறதே!

இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்தால் வடமொழிச் சொற்களைத் தமிழில் புகுத்துவது தமிழுக்குக் கேடு செய்கிறதே தவிர ஆக்கம் செய்யவில்லை என்பது தெளிவாகத் தெரியவில்லையா? தெரிந்துதானே மறைமலையடிகள் தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்தார்!

அப்படியிருக்கத் தாம் எழுதுகின்ற பாடல்களிலும் கதைகளிலும் வேண்டுமென்றே—தமிழ்ச்சொற்கள் இருக்கும் போதே வடமொழிச் சொற்களைப்புகுத்தி எழுதுவதோடு, மற்றவர்களையும் அவ்வாறு எழுதச் சொல்லி அறிவுரை கூறுகிறாரே அந்தப் பாவலர், அது வேலியே பயிரை மேய்வதோடு நில்லாமல் மிதித்தும் அழிப்பதுபோல் அல்லவா இருக்கிறது!

செய்திகள்.

1. புதுவை தனித்தமிழ்க் கழக ஆண்டு விழா:

கடந்த சுறவம் 8 (21-1-79) ஆம் பக்கல் காலை 10 மணியளவில் புதுச்சேரி தனித்தமிழ்க் கழக முதலாம் ஆண்டு விழா, புதுவை நகர மன்ற மாடியரங்கில், கழகத்தலைவர் திரு. **தமிழநேயன்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கழகச்செயலர் திரு. **தமிழமல்லன்** க.இ. வரவேற்புரை நிகழ்த்தி ஆண்டறிக்கையைப் படித்தார். பின்னர், புலவர் **முதுகண்ணன்** தலைமையில் பாட்டரங்கம் நடந்தது. பாவலர்கள் **பண்ணரசன், சித்தன், தனிமகன், வேங்கடேசன், பொன். முத்தையன்** ஆகியோர் கலந்து கொண்டனர். ஆண்டு மலரைப் புரவலர் திரு. **நா. கோவிந்தசாமி** அவர்கள் வெளியிட திரு. **மதுரகவி** அவர்கள் முதல் மலரைப் பெற்றுக் கொண்டார். அடுத்துப் புதுவை அரசியல் தலைவர்களான திருவாளர்கள் **சி. பி. திருநாவுக்கரசு, ம. சுகானந்தம், வி. விநாயகம், விசுவநாதன்** ஆகியோர் தனித்தமிழ்க் கழகத்தை வாழ்த்திப் பேசினர்.

மாலை நிகழ்ச்சி, திரு. **சிவ. சண்முகம்** அவர்களின் இசையுடன் தொடங்கியது. தமிழில் பிறமொழிக் கலப்புக்குப் பெரிதும் கரணியம் சமயமா அரசியலா எனும் தலைப்பில் நடைபெற்ற பட்டி மன்றத்திற்குப் புலவர் திரு. **த. ச. தமிழன்** நடுவராக அமர்ந்து நடத்தினர். 'சமயமே' என்ற அணியில் திருவாளர்கள் **அ. பசுபதி.** க.மு, **திருத்தொகையன்** க.மு., **இளங்கோ அறி.இ; கல்.இ.** ஆகியோரும், 'அரசியலே' எனும் அணியில் திருவாளர்கள் **சத்திவேல் க.மு., பொன். பதுமநாபன் க.மு., தமிழ்மாறன் க.இ.** ஆகியோரும் கலந்து கொண்டனர். அடுத்து, தீர்மானங்கள் கழகச் செயலர் திரு. **க. தமிழமல்லன்; க.இ.** அவர்களால் படிக்கப் பெற்றன. இறுதியில் பாவலரேறு உயர்திரு **பெருஞ்சித்திரனுர்** அவர்கள் எழுச்சி மிக்க ஓர் உரையினை நிகழ்த்தினுர்கள். தனித் தமிழின் தேவை பற்றி எடுத்துக் கூறித் தனித்தமிழ்க் கழகச் செயற் பாடுகளைப் பாராட்டிப் பேசினுர்கள். விழாவில் ஆசிரியர் அவர்களுக்குப் பாவலர் அன்பு நிலவன் 5 உருபாவும், திரு. ழான். செல்வராசு 1 உருபாவும், கோல்டன் மின்திறலார் சார்பாக 2 உருபாவும், சுப்பிரதீபக்கவிராயர் தீந்தமிழ் மன்றச் சார்பாக 2 உருபாவும் அன்பளிப்பாக அளிக்கப்பட்டது. இறுதியில் திரு. சீவானந்தம் அவர்கள் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுற்றது.

2. அண்ணுமலை—மணமல்லி வாழ்க!

கடந்த 2-2-79 வெள்ளி காலை 9 மணியளவில் தருமபுரி வட்டாட்சித்தலைவர் திரு. எசு. கே. தும்பராசு அவர்களின் மகள் செல்வி. **மணமல்லி**க்கும், அவர் அளியர் செல்வன் **அண்ணுமலை**க்கும், பாவலரேறு **பெருஞ்சித்திரனுர்** அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்த விழா நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி, திருவாளர்கள்

சாமித்துரை (மாவட்ட ஆட்சி அதிகாரி), **வி. இரா. வேங்கன்** (மாநில. தி.க. பொருளர்) புலவர் **எழில்நிலவனுர்,** எம். என். நஞ்சையா. (மாவட்ட தி.க, தலைவர்) ஆகியோர் நல்லுரை யாற்றினர். இறுதியில் **பாவலரேறு** அவர்கள் திருமண முறை பற்றியும் வாழ்வியல் நெறி பற்றியும் நீண்டதொரு சிறப்புரை யாற்றினுர்கள். திரு. **கோ. மு. மாதவன்.** க.மு; ஆ.ப. (தலைவர் அரசு மேனிலைப்பள்ளி, பாலக்கோடு) அவர்கள் நன்றியுரை கூறினுர். இனிய விருந்துக்குப்பின் மணவிழா இனிது நிறைவுற்றது.

3. தருமபுரி மாவட்டக் கூட்டுறவு சருக்கரை ஆலை, தமிழ்ச்சங்கம்:

பாலக்கோடு, தருமபுரி மாவட்டக் கூட்டுறவு சருக்கரை ஆலை தமிழ்ச் சங்கத்தின் இரண்டாவது சிறப்பு நிகழ்ச்சி, கடந்த 2-2-79 மாலை 5 மணியளவில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திரு. ஆர். எம். **சவகர்** தலைமை தாங்கினுர். திரு. **டி. கணேசபாபு** வரவேற்புரை யாற்றினுர். திருவாளர்கள் **துரை கணேசன்** (துணைத்தலைவர் தமிழ்ச்சங்கம், தருமபுரி), **கோ. முகுந்த மாதவன்** க.மு. (தலைமை யாசிரியர் பாலக்கோடு) ஆகியோர் கருத்துரைக்குப்பின் **பாவல ரேறு பெருஞ்சித்திரனுர்** அவர்கள் அரிய ஓர் உணர்வுரை யாற்றித் தமிழ்க் கழகத் தொண்டை வாழ்த்தினுர்கள். இறுதியில் திரு. துரை. அவர்கள் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவுற்றது.

4. தருமபுரித் தமிழ்ச்சங்க நிகழ்ச்சி:

கடந்த 2-2-79 இரவு 7 மணியளவில். தருமபுரித் தமிழ்ச் சங்கத்தின் திங்கள் நிகழ்ச்சி, குமாரசாமிப்பேட்டை, செங்குந்தர் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. தமிழ்ச்சங்கத் துணைத்தலைவர் உயர்திரு. **கோ. முகுந்தமாதவன்.** க.மு; ஆ.ப. அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்புச் சொற்பொழிவாளர் தம் அறிவு நலன்களையும் தொண்டுச் சிறப்புகளையும் பாராட்டிப் பேசினுர். அடுத்து, **பாவல ரேறு பெருஞ்சித்திரனுர்** அவர்கள் **'தமிழும்—தமிழரும்'** என்னும் தலைப்பில் வீறுரை யாற்றினுர்கள். இரவு 9 மணியளவில் கூட்டம் நிறைவுற்றது.

பிற செய்திகள்.

1. நாகராசன்—வனசா வாழ்க!

கடந்த சுறவம் 20-ஆம் பக்கல் திருச்சி, நகரக்கிளை உ.த.க. செயலரும், திருச்சி மாவட்டம் திருக்குறள் பேரவைத் துணைத்தலைவரு மான திரு. **தி. சா. நாகராசனுக்கும், வனசாவிற்கும்** திருமணம் நடந்தது. தவத்திரு. குன்றக்குடியடிகளார், மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர், பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை யார், பாவலரேறு பெருஞ்சித்திரனுர், பொதுச் செயலாளர், புலவர். இறைக்குருவனுர், தனித்தமிழ்ப் பாவலர். நா. தண்டபாணி ஆகியோர் வாழ்த்துகள் விடுத்திருந்தனர். திருக்குறள் பேரவைப்

பொதுச் செயலர் ந. சண்முகம், வரகனேரி வட்டாரத் திருக்குறள் பேரவைச் செயலர் சா.கி. அழகுமணி, மற்றும் உ.த.க, தென்மொழி, திருக்குறள் பேரவை அன்பர்களும் நகரப் பெரியோர் பலரும் கலந்து கொண்டு திருமண நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர். திருமண நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உரு: 16 வழங்கப் பெற்றது. மண மக்கள் எல்லா நலன்களும் பெற்றுச் சிறப்புற்று வாழத் தென்மொழி வாழ்த்துகிறது.

2) குழந்தை வீரணன் வாழ்க:

கடந்த 1-12-78 ஆம் பக்கல் படைத்துறை அஞ்சலம் (A.P.O) அலுவலர் திரு. **வீரபாண்டியன்** அவர்களின் தந்தையார் தமது இல்லத்தில் காலமாகி விட்டதன் நினைவாகவும், அதே பின்னிரவு 2-12-78 காலை 4 மணியளவில், திரு. வீரபாண்டியன் துணைவியார் பெற்றெடுத்த ஆண் குழந்தைக்கு **வீரணன்** என்று பெயர் சூட்டியதன் நினைவாகவும், தென்மொழி வளர்ச்சிக்கு உருபா: 15 நன்கொடையளிக்கப் பெற்றது. குழந்தை **வீரணன்** பல நலன்களும் வளங்களும் பெற்றுப் பல்லாண்டு வாழத் தென்மொழி வாழ்த்துகிறது.

3) மின்பாறை அன்பர் கி. பாலுவின் அருட்கொடை:

நெடுநாளையத் தென்மொழி அன்பரும், முகவரும் ஆகிய கோவை, மின்பாறை திரு. **கி. பாலு** அவர்கள், திட்ட அலுவலகத்திற்கென, தமிழ் வரைவுப் போட்டியில் முதல்பரிசு உரு: 250 பெற்றதை முன்னிட்டுத் தென்மொழி வளர்ச்சிக்கென உரு: 10 அன்பளிப்பாக விடுத்துள்ளார். அவர் அறிவாற்றல் மேலும் சிறந்து விளங்க நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகின்றோம்.

4) செந்தமிழ் வாழ்க!

தஞ்சை மா.வ. கங்களாஞ்சேரித் தென்மொழியன்பர் திரு. **மு. இளமுகிலன்** தமக்குக் கடந்த 19-12-78 அன்று பிறந்த குழந்தைக்குப் **பாவலரேறு பெருஞ்சித்திரனார், செந்தமிழ்** என்று பெயர் சூட்டியதன் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உரு. 10 அன்பளிப்பாக விடுத்துள்ளார். குழந்தை **செந்தமிழ்** எல்லா நலன்களும் பெற்று இனிதே வாழத் தென்மொழி நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது.

5) பாவாணர் தமிழ்க் குடும்பத் தீர்மானம்:

நெய்வேலி, பாவாணர் தமிழ்க்குடும்ப ஆட்சிக்குழு கடந்த 11-12-78 அன்று கூடிக் கீழ்க்காணும் தீர்மானத்தை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளது.

“இராசாசி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, சென்னையிலுள்ள **பாரிமுனை**யின் பெயரை **இராசாசிமுனை** என்று மாற்றவிருக்கும் தமிழக அரசின் முடிவை மறுஆய்வு செய்யவேண்டுமென்றும், ஏற்கனவே உள்ள தூய தமிழ்ப் பெயராகிய **பாரிமுனை** என்பதை மாற்ற வேண்டாம் என்றும் அரசை இக்குழு கேட்டுக் கொள்கிறது.”

அருகி இருக்கும் இந்நாளில் அக்குறை சற்றே குறையத் தாங்களும் பாவாணரும் இருத்தலை எண்ணி ஆறுதலுறுவோரில் யானும் ஒருவன். தமிழகம் மீள வேண்டுமெனில் தங்களையொத்த சான்றோரின் உணர்வு, செயல் இவற்றால் மட்டுமே இயலும். ஆக, தலைமையாய் இருந்து ஆணையிட, வழி நடாத்த பலவகையானும் திறன் பெற்றுள்ள தாங்கள் "பொழுதுபோக்கு அரசியலாளர்" "தொழில் அரசியலாளர்", "ஈரத்துணியிட்டு கழுத்தறுக்கும் அரசியலாளர்" இவர்களை நம்பி அவரோடு உறவாடல் யாது கருதியோ? அந்த"....."கள் அன்றோ தங்கள் வழி வரல் வேண்டும்? "ஐயோ இச் சான்றோனைப் புறக்கணித்தோமே" எனக் கவல வேண்டும்? அந்த "இழிவு"கள் இப்போதுங்கூட உங்களை ஏதோ தங்கள் பக்கம் இவர் இருந்தால் தாம் தனித் தமிழரெனக் காட்டிக் கொள்ளும் வாணிக நோக்கோடுதான் தம் நிகழ்வுகளில் தாங்கள் கலந்து கொள்ள அவாவுகின்றனர். ஆக. எம் தலைவ.! தமிழினத்தின் விடிவுக்காக பாடி விடமைக்க வாழ்வையே வேள்வியாக்கி உள்ள பெரும! நீங்கள் நீங்களாகவே நின்று எம்மை வழி நடத்துங்கள். தமிழகம் உம் தூய உள்ளவாற்றலால் தலை நிமிர்ந்திடல் உறுதி. அன்பும் பணிவும் உள்ள

—**மா. செ. தமிழ்மணி**. வேட்டாங்குளம்.

0:634: தமிழ்நலஞ்சான்ற ஐயா, வணக்கம். தேசியத் தற்பணி (**RSS**) சார்பில் நடைபெற்ற மேடையில் சொற்பொழிவாற்றிய தாலேயே நீங்கள் ஆரிய அடிமை என திரு. கௌதமனார் இனங் கண்டுள்ளார். ஐயா அவர்கள் அங்கு என்ன பேசினார் என அறியாமல் நுனிப்புல் மேய்ந்தாற் போன்று கூறியிருப்பது வியப்பிலும் வியப்பே. அவர்களின் குழு அமைப்பு எப்படித் திட்ட வட்டமாகவும் ஒழுங்காகவும் செயல் படுகிறதென்றும், அவர்கள் தலைமையின் கீழ் எப்படிக் கட்டுக் கோப்பாக இயங்குகிறார்கள் என்றும் பாராட்டினாரே ஒழிய, அவர்களின் அடிப்படை இனவெறிக் கொள்கையைத் தமிழர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எங்கேயும் எவ்விடத்தும் அவர்கள் வாயவிழ்த்துக் கூறவில்லை யென்பது நன்கு அறிய வேண்டும். மற்றும் கலைஞரைச் சாடுவதில் மதுரை அன்பர் என்ன பயன் கண்டாரோ? வள்ளுவர் கோட்டமா, தமிழர்களின் துன்பமெல்லாம் துடைத்துவிடும் என்பவர் 'தமிழ்நாடு அரசு' பெயர் மாற்றம் செய்தபோது எத்துணைத் தமிழர்களின் ஏழ்மை நிலை தொலைந்தது என அவர் கருதுகிறார். நம்முடைய தனித்தமிழ் முயற்சியால் மட்டும் ஏழ்மை போய்விடுமா? தமிழின முன்னேற்றத் திற்கு இவையும் ஒன்றான ஊன்றுகோலென அறிய வேண்டாமா?

—தென்மொழி குழந்தை **ஈகவரசன்**, திருச்சி-14.

0:635: அன்புள்ள ஐயா, வணக்கம். தாங்கள் இதுகாறும் செய்து வரும் நற்றமிழ்த் தொண்டு நாளும் போற்றுதற்குரியதே. 'தென்மொழி'யை யான் கற்குந்தோறும் தீந்தமிழின் புதியச் சொற் களைப் படிக்க முடிகிறது.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை-அரிமாவெனச் சீறிச் செந் தமிழின் வளங்காத்திடும் தமிழ்க் காவல, தங்களது உறுதி கண்டு, எனதுள்ளம் மகிழ்ச்சியுற்றுக் கூத்தாடுகிறது. தமிழ்ப் படித்து, மொழி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பவர்கள் இறை மாட்சி மறுத்து வரும் இக்காலத்தில் தாங்கள் அறிவுக்குப் பொருந்தும் வகையில் இறைப்பற்றோடு இன்றமிழ்ப் பணியாற்றுவதைக் கண்டு மிகவும் மகிழ்கின்றேன். —**ஆ.பெ. அரசு**, மதுரை-10.

0:636: தனித்தமிழ் நெஞ்சீர்! வணக்கம். தென்மொழி சுவடி 15 ஓலை 5,6-இல் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய "ஆசிரியவுரை" ஆய்வுக் கண்ணோட்டத்தோடு அமைந்து யாராலும் மறுக்க முடியாத கருத்துகளைக் கொண்டுள்ளது. அறிவுடையோர், தனித்தமிழ் தழைப்பதில் அக்கறையுடையோர் அக் கருத்துகளை அப்படியே ஏற்றுக்கொள்வர். தமிழ்நாடு அரசும் இதை எண்ணிப் பார்த்து எழுத்துச் சீர்த்திருத்தம் பற்றிய புதுச் சட்டத்தைப் பின் வாங்க வேண்டும் என்பது என் போன்றோர் கருத்தும் விருப்பமும் ஆம். தக்க நேரத்தில் தகவுரை. தனித்தமிழ் அறிவில்வல்ல உங்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

—**சி. சு. எழிற்கண்ணன்**, விரிவுரையாளர், மதுரை,

0:637: பெருமதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு, நெஞ்சு நிறைந்த வணக்கம் பல. தமிழ் எழுத்துகளில் தேவையற்ற சீர் திருத்தம் கொண்டு வந்த நமது முதல்வர் தமிழில் எண் சீர்திருத்தம் கொண்டு வருவாரா? பம்பாய் முதலிய நகரப் பேருந்துகளில் கூட இந்தியில் எண்கள் எழுதப் பெற்றுள்ளன. உலக மக்கள் எல்லோரும் கூடுகின்ற அந்த நகரப்பேருந்து எண் தெரியாமல் பலர் தொல்லைக்கு உள்ளானதை நேரில் கண்ட நான் நமது தமிழகத்தில் தமிழ் எண்கள் என நாம் எண்ணும் க, உ, ௩ போன்ற எண்கள் வழக்கில் சிறிதும் இல்லாமை கண்டு மனம் நொந்தேன். ஆகவே தாங்கள் எண் சீர் திருத்தம் பற்றி முதல்வரின் கவனத்திற்கும் கொண்டு வர வேண்டுகின்றேன். **வெ. மோதிலால் நேரு.** (இளங்கலை) சென்னை-5.

0:638: ஐயா, ஈழத்தை நினைத்தால் நெஞ்சம் நெருப்பாகின்றது. ஈழத்தமிழன், இந்தியத்தமிழன், இசுலாமியத்தமிழன் எனத் தங்களுக்குள் இனம் பிரிந்து வாழ்ந்த இலங்கைத் தமிழர்களை வெட்டிமுறித்து வீதிகளிலே கொட்டிக் குவித்து கொக்கரிக்கின்றனர் சிங்கள வெறியர்கள். முச்சந்திகளிலே தமிழ்ப் பெண்டிர்தம் மார்பு அறுக்கப் படுகின்றது. கதறக் கதறக் கற்பு அழிக்கப்படுகின்றது. உடைகளைக் களைந்துவிட்டு ஓடவிட்டு வேடிக்கைப் பார்க்கின்றனர். சிங்களத்தைச் சீர்ப்படுத்தச் சென்ற செந்தமிழினம் சீரழிக்கப்பட்டுச் செத்து மடிகின்றது. இங்கோ...... சேரன் செங்குட்டுவனது வீரம் பற்றிப் பேசிப்பேசியே செயவர்த்தனவிடம் நாம் இழிந்து போய்க் கொண்டு இருக்கின்றோம். செயவர்த்தன சென்ற இடமெல்லாம் வரவேற்று மகிழ்ந்த இந்நாட்டிலே... .... நினைத்தால் நெஞ்சம் நெருப்பாய் எரிகின்றதய்யா. இலங்கைத்தமிழர் தம் போராட்டத்திற்கு உலகத் தமிழரின் ஒருமித்த ஆதரவினைத் திரட்டவேண்டிய காலம் கடுகி வருகின்றது. அதைச் செய்யக்கூடிய ஆற்றலும், கூர்மதியும் இன்று தமிழகத்திலே கலைஞரும், பெருஞ்சித்திரனும் போன்ற மிகச் சிலருக்கே உண்டு என்பது உலகறிந்த செய்தி. அதைத் தங்களைப் போன்றோர் கலந்துரையாடி எங்களைப் போன்ற இனபற்றுள்ளோர் உதவியோடு உடன் நிறைவேற்றி, இலங்கையில் வாடும் இன்தமிழர் தம் வாழ்விற்கும், போராட்டத்திற்கும் உதவிடாமல் போனால், தாங்கள் தங்கள் கடமையிலிருந்து வழுவினீர்கள் என எதிர்காலத்து வரலாற்றிலே உறுதியாய் எழுதப்படும். உலகத்தமிழர்களே ஒன்று படுங்கள்.

—**முகிலன்**, பெங்களூர்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005 (தமிழகம்).